# போலீஸ் பார்வை

மாத இதழ்

# POLICE PARVAI

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-8 • Volume-8 • இதழ்-8 • Issue-8 • ஜூன்-2023 • June-2023 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV    E_Book: www.policeparvai.com



# செங்கோல் குறித்த புரிதல் வேண்டும்



## கள்ளச்சாராயம் முழுமையாக ஒழிக்கப்படும்: DIG ஜியாவுல் ஹக் IPS





## விவசாய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம்: தஞ்சை புதிய ஆட்சியர் தீபக் ஜேக்கப் IAS

## மோசடி செய்யும் முத்தூட்: கண்டித்த காவல் துறை

• இயற்கை மருத்துவம்

குதிரைவாலி அரிசி மருத்துவப் பயன்கள்

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள புதுப்பொலிவுடன் எங்கள் இணைய தளம்

www.policeparvainews.com

'க்ளிக்' செய்யுங்கள்

• ஜோதிடம்

துல்லியமாக கணிக்கப்பட்ட ராசி பலன்கள்...


திருச்சியில்
ஓர் இனிய உதயம்!
SR
Our Grocery
தரமான மளிகை மலிவான விலையில்
உங்கள் இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur, Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808 | 8610643636

# போலீஸ் பார்வை

**ஜூன் 2023 மலர் 8 இதழ் 8**



| | | |
|---|---|---|
| அச்சிட்டு வெளியிடுபவர் | : | ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன் |
| ஆன்மீக ஆலோசகர் | : | Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி |
| கௌரவ ஆசிரியர் | : | புலவர் தியாக சாந்தன் |
| முதன்மை ஆசிரியர்கள் | : | S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன் |
| துணை ஆசிரியர்கள் | : | N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீ னிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர் |
| இணை ஆசிரியர்கள் | : | K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால் |
| சட்ட ஆலோசகர்கள் | : | S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., K.சந்திரசேகரன் M.A., M.L. |
| சிறப்பு ஆலோசகர் | : | S.செயத்அலி B.Sc., L.L.B., |

**தலைமை நிருபர்கள்:** S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், V.S.முத்துபாண்டியன், S.சண்முகநாதன், P.பாலசுப்பிரமணி, N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், G.D.கமல், A.மாரிராஜா, P.ஜெகதீஷ்

**சிறப்பு நிருபர்கள்:** SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், S.ஆசிப் முஹம்மது, B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், S.R.காமராஜ், A.அந்தோணி அருளப்பா, Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, M.பாண்டியராஜன், P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், KCM.சுரேஷ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன்

**நிருபர்கள் குழு:** G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, R.மணிகண்டன், A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், P.பாஸ்கர், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், P.பாலு, R.பழனிச்சாமி, R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீ னிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.சீனிவாசலு, V.வினோத்குமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, B.ரமேஷ், R.நடராஜன், S.பிரசாத், U.தியாகராஜன், N.தினேஷ்குமார், P.பாலசுப்பிரமணியன், T.V.செல்வகுமார், S.சரவணன், V.மெய்யப்பன், R.சுதர்சன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.கிஷோர் ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், R.மணிமாறன், A.நூர்முஹம்மது, T.ஜெயபிரகாஷ், K.கண்ணன், K.பாபு, P.பிரவீன்குமார், G.நந்தகுமார், M.மணிவண்ணன், A.முத்துராஜ் ஆசிர்வாதம், V.சுப்பிரமணியன், V.அஜய்சர்மா, G.ராமமூர்த்தி, S.ஸ்ரீ னிவாசன், M.சேகர், I.ஷாஜஹான், M.தணிகாச்சலம், A.G.T.மகுடேஸ்வரன், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், I.ஜெய்மனோகர், M.பெர்னாட்ஷா, V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R. வெங்கடேசன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், ராஜராஜேந்திரன், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, N.ரத்தினம், C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, R.செங்குட்டுவன், P.அசோக்குமார், B.வளர்மதி, S.விக்னேஷ், M.வெங்கடேஷ், S.நவீன், S.கமலகண்ணன், M.ராஜகோபால், S.அந்தோணியோ ஹரி, T.ஆலன்பே, P.அந்தோணி ஜேம்ஸ், B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், N.பரமசிவம், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், G.லெட்சுமணன், Y.ராயிஸ் அஹமது, R.கண்ணன், S.மணி, K.மகேஷ், V.பழனிசாமி, A.முகமதுயூனுஸ், K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், S.அசோக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், L.பிரஃபுல்ஜெயின், V.சண்முகராஜ், K.மகேந்திரன், D.சிவக்குமார், M.மகேஸ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, N.ஷண்முகமூர்த்தி, A.குமரன், J.சேட்டன் ஷர்மா, P.சதீஷ் M.முகமது உமர் பாருக், Y.முபாரக், V.சுபாஷ், MS.அப்துல்மஜீத், M.தினேஷ்பாபு, S.பூர்ணசந்திரன், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, G.ஸ்ரீதரன், K.லக்ஷ்மண குமார், M.மஹேஷ்சங்கேந்தி, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், J.தினேஷ்சிங், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S.அப்பாச்சி மணி, S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், M.பர்குணன், S.மோகன், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், T.திலீபன் குமார், G.V.ஜெகதீசன், A.மீனாட்சி சுந்தரம், N.நவீன்குமார், M.சஞ்சய், V.லெட்சுமணன், R.சஞ்சய் அமர்நாத், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர்



அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542
E.mail: editorpoliceparvai@gmail.com, Web site.www.policeparvai.com



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

Designed by: QUEEN BEE CREATIVE




# புரிதல் வேண்டும்..!

செங்கோல் விசயத்தில் ஆதீன வரலாறு தெரியாத சிலர் ஆதீனங்கள் பிற்காலத்தில் தோன்றியது என்றும் மேற்படி தங்கள் வன்மத்தையும் இதோடு இணைத்து பலர் பேசுவதை கவனித்தேன்!

ஆதீனங்கள் வேளாளர்கள், அந்தணர்களால் சைவ சமய வளர்ச்சிக்காக தோற்றுவிக்கபட்டது. இது தமிழ்நாட்டில் 2,500 வருடங்களுக்கு மேலாக இயங்குகிறது. அதில் தமிழ்நாட்டில் மிகவும் பழமையான ஆதீனம் மதுரை ஆதீனம் 2,500 வருடங்கள் பழமையானது. மதுரை ஆதீனத்தின் தற்போதை குருமகா சன்னிதானம் 293 ஆவது பேரரசர் என்பது குறிப்பிடதக்கது. அடுத்து தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள செங்கோல் ஆதீனம் 1,500 வருடம் பழமையானது. செங்கோல் ஆதீனம் தான் பாண்டிய மன்னர்களுக்கு செங்கோல் தரும் உரிமை பெற்ற ஆதீனம். இதுபோல எண்ணிலடங்கா சைவ ஆதீன மடங்கள் செயல்பட்டதாக வரலாற்றில் காண்கிறோம். இதில் தற்போதும் இயங்கும் ஆதீனம் 18!

அதில் தற்போது செங்கோல் தந்த மரபினரான திருவாவடுதுறை ஆதீனத்திற்கும் சோழர்களுக்கும் என்ன தொடர்பு என்று இந்த அதிமேதாவிகள் கேட்கின்றனர். சோழ நாட்டில் பண்டுதொட்டு இயங்கிய சைவ மடங்கள் பல அதுபற்றி சோழர் வரலாறு எழுதிய அறிஞர்கள் தெளிவாக பதிவு செய்துள்ளனர். திருவாவடுதுறை ஆதீனம் மெய்கன்டாரின் தத்துவ மரபை ஏற்று உருவான ஆதீனம் என்றாலும், அவர்களின் மரபு சோழ நாட்டு சைவ மரபு! இதற்கு முக்கிய காரணம் ராஜராஜன் காலத்தில் பாசுபத சைவம் இருந்தது. பிற்காலத்தில் தோன்றிய சித்தாந்த சைவம் சைவ அறிவின் உச்சம் அதன்பிறகு சோழநாட்டில் சித்தாந்த சைவமே உச்சம் பெற்றது. மெய்கன்டாரின் தத்துவம் அத்தகையது! திருவாவடுதுறை ஆதீனம் மெய்கண்டார் வழி. இது தத்துவ ரீதியாக பிற்கால தோற்றம் ஆனால் சைவ ஆதீனங்களின் தோற்றத்தின் காலம்? இதில் அப்போதைய புரிதலுக்கு திருவாவடுதுறை ஆதீனத்தை வைத்து செங்கோல் கொடுக்க வைத்துள்ளனர். இதில் உங்களுக்கு எல்லாம் என்ன பிரச்சனை. இன்று நாடாளுமன்றத்தில் செங்கோல் தர தமிழ்நாட்டின் பழமையான ஆதீனம் மதுரை ஆதீனமே உள்ளபோது யார் என்ன புலம்பி என்ன பயன்?

இதில் செங்கோல் வழங்கும் மரபு வேளாளர்களுக்கு உரித்தானது. அது தமிழர்களின் மரபு. அவர்கள் சோழர் பாண்டியர் போன்ற அரச மரபினருக்கு நந்தி அடையாளத்துடன் கூடிய செங்கோலை அளிப்பது வழக்கம். பாண்டியர் கால செங்கோல் ஆதீனமே உள்ளபோது! வரலாறு தெரியாத அந்த புல்லறிவர்கள் துணிச்சல் இருந்தால் ஆதீனத்திற்கே நேரடியாக வந்து ஐயம் தெளிந்து செல்க! முதலில் சைவம் பற்றிய புரிதல் வேண்டும்! அதுவும் இல்லை. அதன் தோற்றம் வளர்ச்சி தத்துவம் அதுபற்றியாவது புரிதல் வேண்டும்! இது எதுவும் தெரியாது ஆனால் வன்மத்தை வெளிப்படுத்துவதில் வல்லவர்கள்.

பாசுபத சைவம், காளமுக சைவம், கபாலிக சைவம் சித்தாந்த சைவம், வீர சைவம், தமிழ் சைவம் என சைவம் பல காலத்தில் பல தோற்றங்களை பெற்று வளர்ந்த அரச சமயம் இவர்கள் சோழர்களுக்கு மட்டுமல்ல, பாண்டியர் முதலான இந்தியாவின் பல அரசுகளின் அரச சமயமாக விளங்கியவர்கள். சைவர் என்றாலே அவர்களின் தோற்றம் சிந்து சமவெளி நாகரிகத்தோடு நெருங்கிய தொடர்புடையது. இந்த வரலாறு எல்லாம் தெளிவாக தொல்லியல் துறையினரிடம் உண்டு! தேவைபடுவோர் அவர்களிடம் சென்று கேட்டு தெரிந்து கொள்ளவும்.

**ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

## திருச்சி முத்தூட் நிறுவனத்தில்

# நகை அடகுவைத்து பாதிக்கப்பட்டவருக்கு நீதி பெற்று தந்த திருவெறும்பூர் காவல்துறை

திருச்சி திருவெறும்பூர் பகுதியை சேர்ந்த சக்கரவர்த்தி தனக்கு சொந்தமான புஷ்பராக கல் பதித்த தங்க டாலரை கடந்த ஆண்டு 2022 ஏப்ரல் மாதம் முத்துட் பைனான்ஸில் 30 ஆயிரத்து 400 ரூபாய்க்கு அடமானம் வைத்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஆண்டு 2022, ஆகஸ்ட் மாதம் முத்தூட் பைனான்ஸில் இருந்து வந்த கடிதத்தில் சக்கரவர்த்தி அடமானம் வைத்துள்ள தங்கம் தரம் குறைவாக இருப்பதாகவும், ஆகையால் உடனே மேலும் ரூபாய் 11,020 தொகையை செலுத்த வேண்டும் என்றும், இல்லையெனில் உங்கள் தங்கநகை ஏலம் விடப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

இதனை அறிந்து ஓரிரு நாட்களில் பணத்தை ஏற்பாடு செய்து முத்தூட் பைனான்ஸில் தொகையை செலுத்த சென்ற சக்கரவர்த்தியிடம் உங்கள் நகை ஏலம் விடப்பட்டது என்றும் கூறி ஏலம் போன நகையால் பெறப்பட்ட தொகையில் மீதம் ரூபாய் 7,000 இருப்பதாகவும் இதனைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றும் முத்தூட் பைனான்ஸ் மேலாளர் கூறியுள்ளார்.

தனக்கு அநீதி இழைக்கப்பட்டது உணர்ந்த சக்கரவர்த்தி உடனடியாக போலீஸ் பார்வை பத்திரிக்கை துணையுடன் திருச்சி திருவெறும்பூர் காவல் நிலையத்தில் அதிக மதிப்புள்ள எனது நகையை வெறும் 37,000 ரூபாய் தான் பொறும் என்று என்னை ஏமாற்றுகிறார்கள். முத்தூட் பைனாஸ் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் சக்கரவர்த்தி புகார் அளித்தார்.



சக்கரவர்த்தி

திருவெறும்பூர் காவல் ஆய்வாளர் திரு. சந்திர மோகன் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் முத்தூட் கிளை நிர்வாகிகளை அழைத்து முறையாக விசாரணை மேற்கொண்டு சமுதாய சேவை பதிவேடு செய்துள்ளனர்.


இதன் வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கி இந்தியப் பிரதமர் தமிழ்நாட்டின் முதல்வர் அனைவருக்கும் புகார் அளிக்கப்பட்டது. நேர்கொண்ட பார்வையுடன், இவ்வழக்கில் விசாரணை மேற்க்கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி முத்தூட் பைனான்ஸ் நிர்வாகத்திடம் பாதிக்கப்பட்ட சக்கரவர்த்திக்கு இழப்பீடாக ரூபாய் ஒரு லட்சம் வழங்குமாறு உத்தரவிட்டது. இதனை ஏற்று முத்தூட் பைனான்ஸ் நிர்வாகம் பாதிக்கப்பட்டவருக்கு முறையே ஒரு லட்சரூபாய்க்கான காசோலையை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



ஆய்வாளர்
திரு.சந்திரமோகன்



உதவிஆய்வாளர்
திரு.ராஜீவ்காந்தி



முத்தூட் நிறுவனம் அளித்த காசோலை.

**பாதிக்கப்பட்ட நபரின் குரல் :**

சக்கரவர்த்தி ஆகிய நான் எனக்கு ஏற்பட்ட அநீதி வேறு சாமானிய மனிதனுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என் னும் பொருட்டு நடுநிலை வகிக்கும் போலீஸ் பார்வை பத்திரிக்கை நண்பர்களின் துணையுடன் முறையான காவல்துறை உதவியோடு நாட்டின் பிரதமர் தமிழ்நாட்டின் முதல்வர் இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் காவல் நிலையம் என இவ்விடங்களில் நியாயம் கேட்டு நான் அளித்த புகாரினை நன் நெறியுடன் விசாரித்து எனக்கு நீதி கிடைக்கப் பெறச் செய்த அனைவருக்கும் நன்றி கூறி மகிழ்கிறேன்.

தலைமை நிருபர்: **ராகேஷ் சுப்பிரமணியன்,**
திருச்சி



## திருநெல்வேலி கிராம மக்களிடையே

# நடைபயணமாக ரோந்துச்சென்று விழிப்புணர்வு ஏற்படுத்திய காவல்துறை

திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.N.சிலம்பரசன் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட காவல் துறையினர் கிராம பகுதிகளில் முக்கிய இடங்கள் வழியாக நடை ரோந்து மேற்கொண்டு பொது மக்களை நேரில் சந்தித்து போதை பொருள் தீமைகள் குறித்தும், பெண்கள் மற்றும் குழந்தைக ளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், பெண்கள் பாதுகாப்பு மற்றும் போக்சோ சட்டம் குறித்தும் பெண்கள் உதவி மையம் தொலைப்பேசி எண் 181, குழந்தைகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை தெரிவிக்க 1098 என்ற இலவச தொலைபேசி எண், காவல் உதவி செயலி, குழந்தை திருமணம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தலைமை நிருபர்:
**S.சண்முகநாதன்,** திருநெல்வேலி



## இளைஞர்களுக்கு நீச்சல் கற்றுகொடுக்கும் 77 வயது சிங்க பெண்மணி ராமாமிர்தம்: நாகப்பட்டினம் SP.ஹர்ஷ்சிங் IPS நேரில் சென்று பாராட்டு

நாகப்பட்டினம் மாவட்டம் வெளிப்பாளையத்தில் வசித்து வரும் 77 வயதான ராமாமிர்தம் என்ற இவர் சிறுவர்கள், இளைஞர்கள், சிறுமிகள் என பலருக்கும் தனக்கு தெரிந்த நீச்சல் கலைகளை, நீச்சல் குளத்தில் தனக்கான ஓய்வு நேரங்களில் மற்றும் விடுமுறை நாட்களில் கற்றுக் கொடுக்கிறார். இவ்வாறு தன்னம்பிக்கையுடன் துணிச்சலுடன் செயல்பட்டு வரும் 77 வயதான மூதாட்டியின் நற்செயலை மேன்மேலும் ஊக்குவிக்கும் வகையில் நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஹர்ஷ் சிங் IPS அவர்கள் நேரில் அவர்களுடைய இல்லத்திற்கே சென்று பாராட்டினார்கள்.

சிறப்பு நிருபர்: **மு.பாண்டியராஜன்**

# ஜூன் 2023




# ரிஷபத்தில் சூரியன்

ஜூன் மாதத்தில் சூரியன் ரிஷபம் மற்றும் மிதுன ராசியில் பயணம் செய்வார். வைகாசியும் ஆனியும் இணைந்த மாதம். கோவில்களில் திருவிழாக்கள் நிறைந்த மாதம். தென்மேற்கு பருவமழை அட்டகாசமாக ஆரம்பிக்கும் மாதம் ஜூன் மாதம். இந்த மாதத்தில் நவ கிரகங்கள் மேஷ ராசியில் இருந்து வரிசையாக பயணம் செய்கின்றன. குரு, ராகு மேஷத்திலும், ரிஷபத்தில் புதன் சூரியன், கடகத்தில் செவ்வாய் சுக்கிரன், துலாம் ராசியில் கேது, கும்ப ராசியில் சனி என கிரகங்கள் உள்ளன. இந்த கிரகங்களின் பயணம் பார்வையால் மகரம் மற்றும் கும்பம் ராசிகளில் பிறந்தவர்களுக்கு என்னென்ன பலன்கள் கிடைக்கப்போகிறது என்று பார்க்கலாம்.

## மகரம்

உங்களுக்கு நவ கிரகங்களும் சாதகமாக இருப்பதால் வேலையில் சிக்கல் இன்றி இருக்கும். பண வருமானம் அதிகரிக்கும். நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். கல்யாண வாழ்க்கையில் காதல் அதிகரிக்கும். கணவன் மனைவி இடையேயான ஒற்றுமை கூடும். மனதில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும்.

மகர ராசிக்காரர்களுக்கு ஏழரை சனியில் பாத சனி காலமாக இருப்பதால் எதையும் வெளிப்படையாக யாரிடமும் சொல்லாமல் கில்லி மாதிரி வெற்றிகரமாக முடிங்கள். உங்கள் மீது பலரது பார்வை இருக்கிறது. கண் திருஷ்டிகள் அதிகரிக்கும். மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பல நன்மைகள் நடைபெறப்போகிறது.

உடல் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பது நல்லது. நான்காம் வீட்டில் உள்ள குரு ராகு மீது சனி பார்வை விழுவதால் வேலை பளு அதிகரிக்கும். திடீர் தலைவலியும் அதனால் மன அழுத்தமும் அதிகரிக்கும். இல்லத்தரசிகளுக்கு நிறைய வேலைப்பளு கூடும். பண வருமானம் அதிகரிக்கும். நகை, ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படும். பல விசயங்களில் குடும்பத்தில் நாம் சொல்வதை யாருமே கேட்கவில்லையே என்ற எண்ணம் மனதளவில் உங்களுக்கு உளைச்சலை ஏற்படுத்தும் ஈசியாக சமாளித்து விடுவீர்கள்.

சனி பகவான் இந்த மாதம் வக்ரமடைவதால் புதிய திட்டங்களை செயல்படுத்துவீர்கள். தடைபட்டிருந்த காரியங்கள் தடைகள் நீங்கி நடைபெறும். பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.

## கும்பம்

நவ கிரகங்களின் பயணம் சுமாராகவே இருப்பதால் பெரிய அளவில் ரிஸ்க் எடுக்காதீர்கள். வேலையில் இருந்து வெளியேற நினைக்காதீர்கள். இருப்பதை தக்கவைத்துக்கொள்ளுங்கள்.

குருவின் பார்வை சாதகமாக இருந்தாலும் திருமணம் சுப காரியங்கள் நடைபெறுவதில் தடைகள் ஏற்பட்டு பின்னர் சுபமாக முடியும். ஜென்ம சனி காலம் என்பதால் இடையூறுகள் அதிகம் ஏற்படுவதால் சவால்களை சமாளிப்பீர்கள்.

சுப விரைய செலவுகள். குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சினைகளை பொறுமையாக கையாளுங்கள். உடல் ரீதியாக உற்சாகமாக இருப்பீர்கள் மனதளவில் மிகப்பெரிய போராட்டங்களை சந்தித்து கொண்டிருப்பீர்கள். புதன்பகவான் பெயர்ச்சி உங்களுக்கு சாதகமாக உள்ளது. பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சுப விரைய செலவுகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். புதிய முடிவுகள் எடுப்பீர்கள். புதிய சொத்துக்கள் வாங்காதீர்கள். மாணவர்களுக்கு ஜூன் மாதம் நினைத்த கல்லூரிகளில் படிக்க இடம் கிடைக்கவில்லையே என்ற கவலை இருக்கும். அதைப்பற்றி கவலைப்படாமல் படித்து முன்னேறுங்கள்.

ஆறாம் வீட்டில் சுக்கிரன் இருப்பதால் கல்வி கடனுக்காக முயற்சி செய்வீர்கள். பெண்களுக்கு இந்த மாதம் எந்த ஒரு விசயத்தையும் அவசரப்பட்டு முடிவு எடுக்காதீர்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசாதீர்கள். எதையும் எளிதாக கடந்து விடுங்கள். கோபத்தோடு பேசி சிக்கலில் மாட்டிக்கொள்ளாதீர்கள். இல்லத்தரசிகள் உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவது அவசியம். ஆறாம் வீட்டில் செவ்வாய் சுக்கிரன் இணைந்திருப்பதால் உணவு விசயத்தில் கவனம் தேவை. மொத்தத்தில் ஜூன் மாதம் அதிக கவனத்தோடு செயல்பட வேண்டிய மாதமாக அமைந்துள்ளது.

## மேஷ இராசி அன்பர்களே...



குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். ஆனால், குடும்பத்தில் உறவினர்களுடன் வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், சற்று பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். கணவன் – மனைவிக்கிடையே அவ்வப்போது கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. சுபநிகழ்ச்சிகளில் அடுத்தடுத்து கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கையும் சிலருக்கு ஏற்படக்கூடும். புதிய மின்சார, மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு வெளி மாநிலங்களிலுள்ள புண்ணியத் தலங்களை தரிசிக்கும் வாய்ப்பும் ஏற்படக்கூடும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வருவதற்கான வாய்ப்பும் சிலருக்கு ஏற்படும். பிள்ளைகளின் வேலை மற்றும் படிப்புக்காக சிலரின் சிபாரிசை நாடவேண்டி வரும். புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். உங்கள் வேலைகளில் மிகுந்த கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றமும் ஏற்படக்கூடும். அதிகாரிகளின் ஆதரவை எதிர்பார்க்க முடியாது. மாதப் பிற்பகுதியில் அரசுப் பணியில் இருப்பவர்கள் தங்கள் பணிகளில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

தொழில், வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும். சக போட்டியாளர்களால் மறைமுகப் பிரச்னைகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. பற்று வரவில் தவறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதமாக இருக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவிஉயர்வு, ஊதியஉயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கக்கூடும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** விநாயகரை வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது
**ஸ்லோகம் :** கந்தசஷ்டிக் கவசம் சொல்லுதல் (or)கேட்டல் நல்லது. **பரிகாரம்:** முருகப்பெருமானை வழிபாடுதல்
**சந்திராஷ்டமம்:** வைகாசி மாதம்19ம் தேதி 02/06/2023 வெள்ளிக்கிழமை இரவு மணி 11.54 முதல் வைகாசி மாதம் 22ம் தேதி 06/06/2023 திங்கள்கிழமை அதிகாலை 4.34 மணி வரை.

## ரிஷப இராசி அன்பர்களே...



குடும்பத்தில் உள்ளவர்களாலும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களாலும் சிறு சிறு பிரச்னைகள் ஏற்படக்கூடும். மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். எதையும் சமாளிக்கும் மனஉறுதி அதிகரிக்கும். சுக்கிரன் சாதகமாக இருப்பதால் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை ஏற்படும். சிலருக்கு வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் பொருள்சேர்க்கைக்கும் பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர், நண்பர் வீட்டு விருந்து விசேஷங்களுக்குச் சென்று வருவீர்கள். செல்வாக்கும் கௌரவமும் அதிகரிக்கும். கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் ஏற்படக்கூடும். குடும்பத்தினரின் அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சிலர் பழைய வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்குவீர்கள். பிள்ளைகளின் கல்வி மற்றும் திருமண முயற்சிகளில் சற்று சிரமப் பட்டே அனுகூலமான பலன்களை அடைய முடியும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். நேரம் காலம் பார்க்காமல் உழைக்கவேண்டியிருக்கும். உங்கள் வேலைகளை நீங்களே செய்வது நல்லது. அதிகாரிகளிடம் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான நிலை உண்டாகும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கான வங்கிக் கடனுதவி கிடைக்கும். எதிர்பார்த்த அரசாங்க சலுகைகள் கிடைக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்ப உறுப்பினர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். அலுவலகம் செல்லும் பெண்கள் அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** சிவபெருமானை வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது
**ஸ்லோகம் :** கந்தசஷ்டிக் கவசம் சொல்லுதல் (or)கேட்டல் நல்லது. **பரிகாரம்:** முருகப்பெருமானை வழிபாடுதல்
**சந்திராஷ்டமம்:** வைகாசி மாதம்19ம் தேதி 02/06/2023 வெள்ளிக்கிழமை இரவு மணி 11.54 முதல் வைகாசி மாதம் 22ம் தேதி 06/06/2023 திங்கள்கிழமை அதிகாலை 4.34 மணி வரை.

## மிதுன இராசி அன்பர்களே...



குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திருமணம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். இழுபறியாகி வந்த அரசாங்கக் காரியங்கள் சாதகமாக முடியும் . உறவினர்கள் வருகையால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கக்கூடும். தடைபட்ட புதிய முயற்சிகள் இனி சாதகமாக முடியும். வீட்டில் பொன்,பொருள் சேரும் வாய்ப்பும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் பெருமையும் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேர்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். குடும்பத்தினருடன் வெளி மாநிலங்களிலுள்ள புகழ்பெற்ற கோயில்களுக்கும் சுற்றுலாத் தலங்களுக்கும் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களிடம் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். இளைய சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும். முக்கிய முடிவுகளில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை கேட்டுச் செய்வது நல்லது.

அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவு அமோகமாக இருக்கும். சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வார்கள். நிர்வாகத்தினரிடம் வைத்த கோரிக்கை நிறைவேறும்.

தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு தொழில் அபிவிருத்தி அடையும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு பிரச்னை எதுவும் இருக்காது. தேவையான பணம் கிடைக்கும். உறவினர்களிடம் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். வேலைக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** துர்க்கையை வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது
**ஸ்லோகம் :** துர்க்காஷ்டகம் சொல்லுதல் (or)கேட்டல் நல்லது.
**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை துர்கைக்கு 9 நெய்தீபம் ஏற்றி வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.
**சந்திராஷ்டமம்:** வைகாசி மாதம் 24ம் தேதி 7/06/2023 புதன்கிழமை காலை 7.40மணி முதல் வைகாசி மாதம் 26 ம் தேதி 09/06/2023 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிவரை

## கடக இராசி அன்பர்களே...



பணவரவு தாராளமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. காரியங்களில் இருந்து வந்த தடை, தாமதங்கள் நீங்குவதுடன் புதிய முயற்சிகளும் அனுகூலமாக முடியும். செல்வாக்கு அதிகரிக்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். வீட்டில் இருந்த பிரச்னை, உறவினர்களிடையே கருத்து வேறுபாடு முதலியன நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிதுர்வழிச் சொத்தில் இருந்த பிரச்னை சுமுகமாக முடியும். சிலருக்கு பழைய வாகனத்தை மாற்றிவிட்டு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். பிரிந்த தம்பதி ஒன்று சேருவர். கணவன் - மனைவிக்கிடையே பாசம் மேலோங்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். சகோதரர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். அவர்களால் ஆதாயமும் உண்டாகும். நீண்டநாளாக செலுத்த நினைத்த குலதெய்வப் பிரார்த்தனையை செலுத்தி முடிப்பீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் பெருமையும் உண்டாகும்.

பணியாளர்களுக்கு அலுவலகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். பணிச்சுமை குறைவதால், உற்சாகமாகக் காணப்படுவீர்கள். நிர்வாகத்திடம் முக்கிய கோரிக்கை வைப்பதற்கு சாதகமான மாதம். அலுவலகத்தில் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு அரசின் சலுகை, வங்கிக் கடன் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். அவர்களின் சாமர்த்தியத்தால் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

பெண்கள் கணவர் மற்றும் குடும்பத்தாரின் அன்பைப் பெறுவர். மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உறவினர்களிடம் சுமுக நிலை ஏற்படும். புத்தாடை, நகை வாங்கலாம். விருந்து, விழா என்று சென்று வருவீர்கள். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** திங்கள்கிழமைகளில் சிவபெருமானுக்கு வில்வத்தால் அர்ச்சனை செய்து வணங்கி வழிபட மிகவும் நல்லது **ஸ்லோகம் :** வில்வாஷ்டகம் ஸ்லோகம் சொல்லுதல் **பரிகாரம்:** விநாயகருக்கு அறுகம்புல்லால் அர்ச்சனை செய்வதும் நன்மை தரும். **சந்திராஷ்டமம்:** வைகாசி மாதம் 26ம்தேதி 19/06/2023 வெள்ளிக் கிழமை காலை10.01 மணி முதல் வைகாசி மாதம் 28ம் தேதி 11/06/2023 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.37 மணி வரை

## சிம்ம இராசி அன்பர்களே...



தடைகளை முறியடித்து சாதனை படைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். அவசியத் தேவைகள் பூர்த்தியாகும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். குடும்பத்தில் ஆடம்பர வசதிகள் பெருகும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னைகள் மறையும். உறவினர்கள் உதவிகரமாக செயல்படுவர். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்ட உறவினர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து அன்பு பாராட்டுவார்கள். கருத்துவேறுபாடு காரணமாக பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு கனிந்து வரும். விழாக்களிலும் விருந்துகளிலும் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். மாதப் பிற்பகுதியில் உறவினர்களால் மனக்கசப்பு தரும் சம்பவங்கள் நடைபெறக்கூடும் என்பதால், கூடுமானவரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. சிலருக்கு புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களால் சில அனுகூலப் பலன்கள் ஏற்படும். தாய்மாமன் வழியில் சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குக் குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்ற தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரிடும்.

பணியாளர்களுக்கு இதுவரை இருந்த அவப்பெயர் மறையும். சக ஊழியர்களிடையே உங்கள் செல்வாக்கு உயரும். நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

தொழில், வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். லாபம் அதிகரிக்கும். ஷேர் வர்த்தகத்தில் லாபம் கிடைக்கும். மாதப் பிற்பகுதியில் வியாபாரம் விருத்தியடையும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்ப உறுப்பினர்களால் புதிய ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். புதிய பதவி தேடி வரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** மகாலட்சுமி தாயாருக்கு நெய்தீபம் ஏற்றி வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது **ஸ்லோகம் : லெஷ்மி அஷ்ட்டோத்திரம் சொல்லுதல். பரிகாரம்:** கனகதாரா ஸ்தோத்திரம் பாராயணம் செய்வதும் அளவற்ற நன்மை தரும். **சந்திராஷ்டமம்:** வைகாசி மாதம் 28 ம் தேதி 11/06/2023 ஞாயிற்றுக்கிழமை பகல் மணி 12.38 முதல் வைகாசி மாதம் 30ம் தேதி 13/06/2023 செவ்வாய்க் கிழமை மாலை 4.18 மணி வரை

## கன்னி இராசி அன்பர்களே...



துணிச்சல் பிறக்கும். நீண்ட நாள் கனவு நல்லபடி நிறைவேறும். தொடங்கிய காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமுமான சூழ்நிலை உருவாகும். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புத்தாடை, அணிகலன்கள் வாங்க யோகமுண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், பெருமையும் கிடைக்கும். கணவன் -மனைவிக்கிடையே அன்பு மேலோங்கும். பெண்கள் வகையில் நற்பலனை எதிர்பார்க்கலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பழைய சொத்தை விற்றுவிட்டு புதிய சொத்து வாங்கும் வாய்ப்பு ஏற்படும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இளைய சகோதர வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். அவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பணிகளில் கவனம் தேவை. சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அதிகாரிகள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதுடன், விரும்பிய இடமாற்றமும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அனுகூலமான போக்கு காணப்படும். விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். சுயதொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கு வளர்ச்சிக்கான வழி பிறக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்க பெண்களுக்கு உற்சாகம் தரும் மாதம். குடும்ப உறுப்பினர்களிடையே உங்கள் மீதான அன்பும் அக்கறையும் அதிகரிக்கும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சிலருக்கு புதிய பதவி தேடி வரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** வெங்கடேச பெருமாளுக்கு அர்ச்சனை செய்து வழிபடுவதும் வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது **ஸ்லோகம் :** குரு அஷ்ட்டகம் ஸ்லோகம் சொல்லுதல்

**பரிகாரம்:** முருகப் பெருமானுக்கு செவ்வரளிப் பூக்களால் அர்ச்சனை செய்வதும் நன்மை தரும்.

**சந்திராஷ்டமம்:** வைகாசி மாதம் 30 ம் தேதி 13/06/2023 செவ்வாய்க் கிழமை மாலை 4.19.மணி முதல் வைகாசி மாதம் 32ம் தேதி 15/6/2023 வியாழக்கிழமை இரவு 9 51மணி வரை

## துலா இராசி அன்பர்களே...



வருமானம் அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சியும் ஆதாயமும் ஏற்படுவதுடன், செலவுகளும் ஏற்படும். பணவரவுக்குக் குறைவிருக்காது. மாத மத்தியில் கணவன் – மனை விக்கிடையே இருந்த பிரச்னை மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆடம்பர வசதிகள்

பெருகும். மனதில் மகிழ்ச்சியும் உற்சாகமும் அதிகரிக்கும். நண்பர்களின் ஆதரவும், அவர்களால் ஆதாயமும் உண்டாகும். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். புதிய ஆடை ஆபரணாங் களின் சேர்க்கை உண்டாகும். சிலருக்கு வசதியான புதிய வீட்டுக்கு குடிபோகும் வாய்ப்பு உண்டாகும். வேலையின் காரணமாகப் பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேருவதற்கான வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தந்தைவழி உறவினர்கள் முரண்டு

பிடித்தாலும் அனுசரித்துச் செல்வது நல்லது. அரசாங்கக் காரியங்கள் முடிவதில் இழுபறியான நிலை காணப்படும்.

அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். மேலதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். சிலருக்கு பணியின் காரணமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடலாம்.

தொழில், வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியங்கள் தாமதமாக முடியும். சக வியாபாரிகளிடம் கவனமாக இருக்கவும். பங்குதாரர்களால் ஆதாயம் ஏற்படக்கூடும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு கணவரின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தரும். செலவுகளுக்குத் தேவையான பணம் கிடைக்கும். அலுவலகம் செல்லும் பெண்மணிகளுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** வெள்ளியன்று லட்சுமி தாயாருக்கு நெய்தீபம் ஏற்றி வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது **ஸ்லோகம் : விநாயகர் அகவல் சொல்லுதல் (or)கேட்டல் நல்லது.**

**பரிகாரம்:** சதுர்த்தியன்று விநாயகருக்கு அர்ச்சனையும், தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் நன்மை சேர்க்கும்.

**சந்திராஷ்டமம்:** வைகாசி மாதம் 32ம் தேதி 15/06/2023 வியாழக் கிழமை இரவு 9.52 மணி முதல் ஆனி மாதம் 3ம் தேதி (18/06/2023) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.44 மணி வரை

## விருச்சிக இராசி அன்பர்களே...



இந்த மாதம் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டிய மாதம். தொடங்கிய காரியங்கள் வெற்றிகரமாக முடியும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாக இருந்தாலும் முடிவில் சாதகமாகும். தாய்வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டாலும், உடனே நீங்கிவிடும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் பிரச்னைகளைத் தவிர்த்துவிடுவீர்கள். சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் கூடி வரும். சிலருக்கு வீடு, மனை வாங்கும் முயற்சி சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குக் குடும்பத்துடன் ஆன்மிகப் பயணங்கள் மேற்கொண்டு, பிரசித்திப் பெற்ற வெளிமாநில புண்ணியத் தலங்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்கு வெளிநாடு செல்வதற்கான விசா கிடைக்கும். பிள்ளைகளால் சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

பணியாளர்களுக்கு மகிழ்ச்சியான மாதம். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர்.

தொழிலதிபர்கள், வியாபாரிகள் மாதப் பிற்பகுதியில் சிறப்பான பலன்களைக் காணலாம். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.


பெண்கள் குடும்பத்தாரிடம் நன்மதிப்பை பெறுவர். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனுகூலமாக இருப்பர். வேலைக்கு செல்லும் பெண்களுக்கு மகிழ்ச்சியான மாதம். சுயதொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் காளிக்கு நெய் தீபம் ஏற்றி வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது **ஸ்லோகம் :** ஹனுமன் சாலிசா ஸ்லோகம் சொல்லுதல் (or)கேட்டல் நல்லது

**பரிகாரம்:** தேய்பிறை சதுர்த்தியன்று விநாயகர் வழிபாடு செய்தல் நல்லது

**சந்திராஷ்டமம்:** ஆனி மாதம் 3ம் தேதி 18/06/2023 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மணி 5.45 முதல் ஆனி மாதம் 5ம் தேதி 20/06/2023 செவ்வாய்க்கிழமை மாலை 4.07மணி வரை

## தனுசு இராசி அன்பர்களே...



எடுத்த காரியம் வெற்றிகரமாக முடியும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். பகைவர்களின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பொருளாதார வளம் கூடும். மாத முற்பகுதியில் கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் இருந்தாலும், மாதப் பிற்பகுதியில் சிறுசிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையுடன் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். திருமண முயற்சிகளில் இருந்து வந்த தடைகள் நீங்கி, நல்ல வரன் அமையும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். புதிய வாகனம் வாங்கலாம். நண்பர்கள் உறுதுணையாக இருப்பார்கள். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவீர்கள். உறவினர்கள் வருகையும், அவர்களால் நன்மையும் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் சொத்துச் சேர்க்கைக்கும், பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம். பணியாளர்கள் சிறப்பான வளர்ச்சி காணலாம். சம்பள உயர்வுக்குத் தடையில்லை. வேலையின் காரணமாக குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேருவர். பதவி உயர்வு உண்டு. எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும்.

தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு அலைச்சல் அதிகரித்தாலும், நல்ல வளார்ச்சியும், பணவரவும் இருக்கும். பங்குதாரர்கள் தக்க சமயத்தில் உதவுவர். சிலநேரங்களில் முயற்சிகளில் தடைகள் வரலாம்.

பெண்களுக்கு குடும்பத்தோடு புனித தலங்களுக்கு சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** தேய்பிறை அஷ்டமியில் பைரவரை வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது **ஸ்லோகம் :** பைரவர் அஷ்ட்டகம் சொல்லுதல் (or)கேட்டல் நல்லது

**பரிகாரம்:** ரோகிணியன்று கிருஷ்ணருக்கு நெய்தீபம் ஏற்றி வழிபடவும்.

**சந்திராஷ்டமம்:** ஆனி மாதம் 5ம் தேதி 20/06/2023 செவ்வாய்க் கிழமை மாலை 4.08முதல் மணி முதல் ஆனி மாதம் 8ம் தேதி 23/06/2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 3.45மணி வரை

## ரிஷப இராசி அன்பர்களே...



பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத் தேவைகள் பூர்த்தி ஆகும். பொன் பொருள் சேரும். உறவினர்களுடன் சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். கணவன் - மனைவி ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உறவினர்கள் வகையில் வீண் விரோதம் வரலாம். அவர்களிடமிருந்து ஒதுங்கி இருப்பது அவசியம். சிலருக்கு தடைப்பட்ட திருமணம் கூடிவரும். சகோதர வகையில் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கி, அவர்களுடன் சுமுகமான உறவு ஏற்படும். வழக்குகளில் வழக்கறிஞர்களின் ஆலோசனை கேட்டுச் செயல்படுவது அவசியம். சிலருக்கு எதிர்பாராத பயணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்களால் சில ஆதாயங்கள் ஏற்படக்கூடும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளும்போது கைப்பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும். புதிய மின்சார, மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக பணியாளர்களிடம் போதுமான ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. அதிகாரிகளை அணுகும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பலன் கிடைப்பதற்குக் கூடுதலாக உழைக்கவேண்டி வரும். முக்கிய முடிவுகளை எடுப்பதில் நிதானம் அவசியம். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். போட்டியாளர்களால் தொல்லைகள் ஏற்படக்கூடும். பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். குடும்பத்தோடு புனித தலங்களுக்கு சென்று வருவீர்கள். தடைபட்டு வந்த சுபநிகழ்ச்சிகள் கைகூடும். அலுவலகத்தில் உற்சாகமாகச் செயல்படுவீர்கள்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** செவ்வாயன்று முருகனுக்கு பால் அபிஷேகம் செய்து வணங்கி வழிபட மிகவும் நல்லது **ஸ்லோகம் :** குரு அஷ்ட்டகம் சொல்லுதல் (or)கேட்டல் நல்லது.

**பரிகாரம்:** தேய்பிறை சதுர்த்தி அன்று விநாயகர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**சந்திராஷ்டமம்:** ஆனி மாதம் 8ம் தேதி 23/06/2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 3.46 மணி முதல் ஆனி மாதம் 10ம் தேதி 25/06/2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.07 மணி வரை

## கும்ப இராசி அன்பர்களே...



காரியங்களில் வெற்றி, பொருளாதாரச் செழிப்பு, மகிழ்ச்சி ஆகிய அனுகூலப் பலன்களைக் காணலாம். குடும்பத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உறவினர்களுடனான உறவு சுமுகமாகக் காணப்படும். குடும்பத்தோடு புனிதத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். சிலருக்கு பொன், பொருள் ஆகியவை சேரும். கணவன் - மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பெண்களால் ஆதாயம் உண்டாகும். விருந்து, விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள். பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாய்வழி உறவுகளால் எதிர்பார்த்த நன்மைகள் நடக்கும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் உண்டாகும். தந்தையின் ஆலோசனை பயனுள்ளதாக இருப்பதுடன், முன்னேற்றத்துக்கும் வழிகாட்டுவதாக அமையும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்க அதிகாரிகளை அணுகும்போது மிகவும் பொறுமை அவசியம். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

பணியாளர்கள் உற்சாகமாக பணிகளில் ஈடுபட்டு மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பதவிஉயர்வு கிடைக்கும்.

தொழில், வியாபாரத்தில் பொருளாதார வளம் அதிகரிக்கும். பகைவர் இடையூறும், அரசு வகையில் அனுகூலமற்ற போக்கும் மறையும். திடீர் பணவரவு இருக்கும். போட்டிகளைச் சமாளித்து வெற்றி கொள்ளும் ஆற்றல் உண்டாகும்.

பெண்களுக்கு குடும்பத்தில் ஆனந்தம் அதிகரிக்கும். தோழிகள் ஆதரவுடன் செயல்படுவர். அக்கம்பக்கத்தினர் உதவிகரமாக இருப்பர். கணவன் மற்றும் குடும்பத்தாரிடம் நன்மதிப்பைப் பெறலாம். வேலைக்கு செல்லும் பெண்கள் சிறப்பான பலன் பெறுவர். சுயதொழில் செய்யும் பெண்களுக்கு லாபம் அதிகரிக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** விநாயகருக்கு அறுகம்புல் மாலை அணிவித்து வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது **ஸ்லோகம் :** கந்த குரு கவசம் ஸ்லோகம் சொல்லுதல் (or)கேட்டல் நல்லது

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமை அன்று முருகனுக்கு அபிஷேகம் செய்து நெய்தீபம் ஏற்றி வழிபட நன்மைகள் அதிகரிக்கும். **சந்திராஷ்டமம்:** ஆனி மாதம்10ம் தேதி 25/06/2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.08 மணி முதல் ஆனி மாதம் 12ம் தேதி 27/06/2023 செவ்வாய்க்கிழமை இரவு 12.44 மணி வரை

## மீன இராசி அன்பர்களே...



பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்களிடையே ஏற்பட்டிருந்த அவப்பெயர் நீங்கும். செல் வாக்கு அதிகரிக்கும். சுபநிகழ்ச்சிகளால் மனதில் உற்சாகம் ஏற்படும். பகைவர்களால் இருந்து வந்த இடையூறுகள் மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. பழுதான பழைய வாகனத்தை மாற்றிவிட்டு, புதிய வாகனம் வாங்குவீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கக்கூடும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கூடுமானவரை தொலைதூரப் பயணங்களைத் தவிர்க்கவும். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்ட உறவினர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து, வலிய வந்து மன்னிப்புக் கேட்பார்கள். நண்பர்கள் உங்கள் முயற்சி களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். தந்தைவழியில் உங்களுக்குச் சேரவேண்டிய சொத்துகள் கிடைப்பதற்கான வாய்ப்பு கனிந்து வரும். சொந்த ஊரிலுள்ள குலதெய்வக் கோயில் திருப்பணி களில் கலந்துகொண்டு உதவி செய்வீர்கள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சி யுடன் செலவுகளையும் ஏற்படுத்துவதாக இருக்கும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறு பாடுகள் நீங்கும். அவரிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், இதுவரை இருந்து வந்த அவப்பெயர் நீங்கி, செல்வாக்கு அதிகரிக்கும். வீண் மனக்கவலை மறையும். அதிகாரிகளை அனுசரித்துச் செல்லவும்.

தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு பொருளாதார வளம் கூடும். லாபம் சிறப்பாக இருக்கும். ஆனால், போட்டியாளர்களால் இடையூறு வரலாம். கணக்குகளைச் சரியாக வைத்துக் கொள்ளவும்.

பெண்கள் குடும்பத்தோடு புனித தலங்களுக்கு சென்று வருவர். வாழ்க்கையில் ஆனந்தம் அதிகரிக்கும். வேலை பார்ப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். சுய தொழில் செய்யும் பெண்களுக்கு நல்ல லாபம் இருக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்:** வெள்ளியன்று மாலையில் லட்சுமியை வணங்கி வழிபட வேண்டியது மிகவும் நல்லது **ஸ்லோகம் :** குரு அஷ்ட்டகம் ஸ்லோகம் சொல்லுதல் (or)கேட்டல் நல்லது

**பரிகாரம்:** வியாழனன்று தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்வது நன்மைகளை அதிகரிக்கும்

**சந்திராஷ்டமம்:** ஆனி மாதம் 12ம் தேதி 27/06/2023 செவ்வாய்க்கிழமை இரவு 12.44 மணி முதல் ஆனி மாதம் 15 ம் தேதி 30/6/2023 வெள்ளிக்கிழமை காலை 7.52 மணி வரை



சேலம் மாநகரில்


# காவல்துறை சார்பாக ஹோட்டல், மருத்துவமனை உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

20.05.2023-ம் தேதி சேலம் மாநகர காவல் ஆணையாளர் திருமதி. பா.விஜயகுமாரி,I.P.S., அவர்கள் சேலம் மாநகரில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் மருத்துவமனை உரிமையாளர்களுக்கு சேலம் மாநகரில் திருட்டை தவிர்க்கும் பொருட்டு விழிப்புணர் கூட்டம் நடத்தி தகுந்த அறிவுரைகள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் சேலம் மாநகர காவல் துணை ஆணையாளர் வடக்கு திரு.கௌதம்கோயல்,I.P.S., அவர்களும், சேலம் மாநகர காவல் துணை ஆணையாளர் தெற்கு திருமதி.S.P.லாவண்யா அவர்களும், சேலம் மாநகர காவல் துணை ஆணையாளர் தலைமையகம் திரு.D.குணசேகரன் அவர்களும் மற்றும் காவல் அதிகாரிகளும் ஹோட்டல் மற்றும் மருத்துவமனை உரிமையாளர்கள் கலந்து கொண்டார்கள். சிறப்புநிருபர்: **அசிப்முகமது.** கோவை



## விஷ நீக்கு முத்திரை



*ஒவ்வொரு கையிலும் பெருவிரலின் முனையை மோதிர விரலின் மூன்றாம் அங்குலாஸ்தியில் வைக்கவும். மற்ற விரல்களை தளர்வாக நீட்டிக் கொள்ளவும். இம்முத்திரை உடலில் சேர்ந்துள்ள மலம், சிறுநீர், சளி, அசுத்த ரத்தம், பித்தம், காதுக்குறும்பி, கணகோழை, வியர்வை உள்ளிட்ட அனைத்து கழிவுகளையும் அகற்றி அவ்வுறுப்புகளை சுத்தம் செய்கிறது. மனதிலுள்ள கெட்ட எண்ணங்களை அகற்றித் தூய்மையான புனிதமான எண்ணங்களை உருவாக்குகிறது.*
*சம்மணங்காலிட்டு தினமும் 10 நிமிடம் செய்க.*

# விவசாய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்

## தஞ்சை மாவட்ட புதிய கலெக்டர் தீபக் ஜேக்கப் IAS

விவசாய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என தஞ்சை மாவட்ட புதிய கலெக்டர் தீபக் ஜேக்கப் IAS கூறினார். தஞ்சை மாவட்டத்தில் கலெக்டராக பணியாற்றி வந்த தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் IAS சென்னை பத்திரப்பதிவுத்துறை ஐ.ஜி.யாக பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அவருக்கு பதிலாக கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டராக பணி புரிந்து வந்த தீபக் ஜேக்கப் IAS தஞ்சை மாவட்ட புதிய கலெக்டராக நியமனம் செய்யப்பட்டார்.

தஞ்சைமாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தஞ்சை மாவட்டத்தின் புதிய கலெக்டராக திரு.தீபக் ஜேக்கப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரிடம் முன்னாள் கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் பொறுப்புகளை ஒப்படைத்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.

தஞ்சை மாவட்டத்தின் 171-வது கலெக்டராக பொறுப்பேற்றுக் கொண்ட தீபக் ஜேக்கப்பை கூடுதல் கலெக்டர் (வருவாய்) சுகபுத்ரா, கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) ஸ்ரீகாந்த், மாநகராட்சி ஆணையர் சரவணகுமார் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள், விவசாயிகள் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

பின்னர் புதிய கலெக்டர் தீபக் ஜேக்கப் IAS நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தஞ்சை மாவட்ட கலெக்டராக பணி புரிய வாய்ப்பு அளித்த தமிழகஅரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். பொதுமக்கள் கோரிக்கைகள் அனைத்தும், உயர் அலுவலர்களுடன் கலந்து ஆலோசித்து விரைவில் தீர்க்கப்படும். மாவட்டத்தில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் எனது கவனத்திற்கு நேரடியாக கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தி, மாவட்டத்தில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கிறது என்பதை அறிந்து அவற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். தஞ்சையில் மதுகுடித்து 2 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணை அறிக்கையை பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த 2014-15-ம் ஆண்டில் தஞ்சையில் உதவி கலெக்டராக பயிற்சியில் இருந்தேன். இதனால் இங்கு திரும்பி வந்ததை, எனது தாய் வீட்டுக்கு வந்தது போல் உணர்கிறேன். தஞ்சை மாவட்டம் காவிரி டெல்டா மாவட்டம் என்பதால், விவசாய பிரச்சினை, விவசாயிகள் கோரிக்கை, பாசன வசதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அனைத்து பிரச்சினைகளும் ஆய்வு செய்து அவை தீர்க்கப்படும். காலிப்பணியிடங்கள் தஞ்சை மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு ஏற்கனவே 2 முறை வந்து ஆய்வு செய்து இருக்கிறேன். அதனால் மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியை பற்றி நன்கு தெரியும். மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியின் தேவைகள், குறைகள், காலிப்பணியிடங்கள் நிரப்புதல் தொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். வருவாய்த்துறை அலுவலர்களுடன் ஆலோசனை செய்து மணல் கடத்தலை முற்றிலுமாக தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.



பயோடேட்டா புதிய கலெக்டர் தீபக் ஜேக்கப் சொந்த ஊர் கேரள மாநிலம் கொல்லம் ஆகும். பி.டெக் படித்துள் ளார். 2014-ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் தஞ்சை மாவட்ட உதவி கலெக்டராகவும், தூத்துக்குடி மாவட்ட உதவி கலெக்டராக பணியாற்றினார். பின்னர் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குனராக பணியாற்றினார். இதன் பின்னர் தேர்தல் ஆணையத்தில் இணை முதன்மை அலுவலராகவும், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குனராகவும், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் மேலாண்மை இயக்குனராகவும் இவர் பணியாற்றினார். கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டராக பொறுப்பு வகித்த இவர், தற்போது தஞ்சை மாவட்டத்தின் 171-வது கலெக்டராக பொறுப்பேற்று செயலாற்றி வருகிறார்.

நிருபர்: **சக்திவேல்,** தஞ்சை.

## கோவை மாவட்டத்தில் காவல்துறை சார்பாக

# SP பத்ரிநாராயணன் IPS தலைமையில் மாபெரும் மக்கள் குறைதீர்க்கும் முகாம்

மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கோவை மாவட்டத்தில் பொதுமக்கள் கொடுத்த மனுக்களின் மீது விசாரணை மற்றும் ஏற்கனவே விசாரித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையில் திருப்தி அடையாத மனுக்களை கண்டறிந்து அம்மனுக்கள் மீதான மறுவிசாரணை (Re-enquiry) (24.05.2023) மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பத்ரிநாராயணன், IPS அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி மனுக்களின் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களை நேரில் வரவழைத்து அவர்களின் மனு மீதான விசரணையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் அதிகாரிகள் மேற்க்கொண்டு, அம்மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது.

மக்கள் குறை தீர்ப்பு முகாமில் குடும்பப் பிரச்சனை, பணப்பரிமாற்ற பிரச்சனை மற்றும் இடப்பிரச்சினை தொடர்பான 114 மனுக்கள் மீது விசாரணை மற்றும் மறுவிசாரணை மேற்கொண்டதில், 3 மனுக்கள் மீது முதல் தகவல் அறிக்கை(FIR) பதிவு செய்யப்பட்டும், 8 மனுக்கள் மீது மனு ரசீது (CSR) பதிவு செய்யப்பட்டும் 103 மனுக்கள் சுமூகமான முறையிலும் தீர்வு காணப்பட்டது. இந்த மக்கள் குறை தீர்ப்பு மனு நாளில் கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் புகார் மனுக்கள் மீது தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.



பிற வேலை நாட்களில் அந்தந்த உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் காவல் நிலையங்களுக்கு சென்று பொதுமக்கள் தங்கள் குறைகளுக்கு தீர்வு காணலாம் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். பொது மக்களின் குறைகளை தீர்க்கும் பொருட்டு கோவை மாவட்டத்தில் நடைபெற்ற இந்த மக்கள் குறை தீர்க்கும் முகாம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.

நிருபர்: **P.நடராஜ்**, கோவை





ஒட்டன்சத்திரம் தாராபுரம் சாலையில் பெண் தவறவிட்ட

# 5 பவுன் நகையை ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுனர் ஆறுமுகத்துக்கு DSP முருகேசன் பாராட்டு

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள தங்கச்சியம்மாபட்டி பகுதியைச் சேர்ந்த காளிமுத்து என்பவருடைய மனைவி பிருந்தா என்பவர் இருசக்கர வாகனத்தில் கட்டைபையில் ஐந்து பவுன் தங்க நகைகளை வைத்துக்கொண்டு ஒட்டன்சத்திரத்தில் இருந்து தங்கச்சி அம்மாபட்டி நோக்கி செல்வதற்காக தாராபுரம் சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது திடீரென கையில் இருந்த பை தவறுதலாக கீழே விழுந்துள்ளது. இந்த நிலையில் சிறிது தூரம் சென்று விட்டு கையில் வைத்திருந்த பையை காணாமல் அதிர்ச்சி அடைந்த பிருந்தா இதுகுறித்து உடனடியாக ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் புகார் அளிஅளித்தார்தார்.

புகார் அளித்த ஒரு சில நிமிடத்திற்க்குள் ஒட்டன்சத்திரம் ஏபிபி நகர் பகுதியைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுனர் 60 வயதான முதியவர் ஆறுமுகம் என்பவர் பிருந்தா தவறவிட்ட நகையை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். இந்த நிலையில் காணாமல் போன நகை ஒரு சில நிமிடத்திற்குள் ஆட்டோ ஓட்டுநரால் திரும்ப கிடைக்கப்பெற்ற சம்பவம் அப்பகுதியில் உள்ள பொதுமக்களை பெரும் நெகிழ்ச்சியிலும் சந்தோஷத்திலும் ஆழ்த்தியது. மேலும் நேர்மையாக செயல்பட்ட ஒட்டன் சத்திரம் பகுதியை சேர்ந்த ஆட்டோ ஓட்டுனர் ஆறுமுகத் திற்க்கு காவல்துறை துணை கண்காணிப்பாளர் DSP. திரு.முருகேசன் அவர்கள் பொன்னாடை போர்த்தி அன்பளிப்பு வழங்கி அவரை கௌரவித்தார்.

முதன்மை ஆசிரியர்: **S.முருகானந்தம்**



## வாழ்வின் சுவாரஸ்யம்!

**வாழ்க்கை ஒரு வட்டமல்ல; நீண்ட பயணம்,
அதில் பல மாற்றங்கள் நிகழும்; அந்த மாறுதலை அறிந்து,
எதையும் எதிர்நோக்கும் மனோதிடத்துடன் பயணத்தை தொடர்ந்து
வெற்றி இலக்கை அடைவதே சுவாரஸ்யமான வாழ்க்கை...**

ஆசிரியர்: டாக்டர் N.பாலகிருஷ்ணன்




**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**

**editorpoliceparvai@gmail.com**

**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. ✆ 9789491438**



**தமிழ்நாடு ஊர்க்காவல் படை 28-வது பணித்திறன் மற்றும் விளையாட்டு போட்டி**

# வெற்றிபெற்றோரை பரிசுகள் வழங்கி பாராட்டிய கடலூர் மாவட்ட SP R.ராஜாராம்

திருவண்ணாமலை ஆயுதப்படை மைதானத்தில் தமிழ்நாடு ஊர் காவல் படையினருக்கான பணித்திறன் மற்றும் விளையாட்டு பொட்டி நடைபெற்றது. விழுப்புரம் சரகம் ஊர்க்காவல் படை சார்பாக கைப்பந்து விளையாட்டு போட்டியில் பங்கேற்று முதலிடம், நீளம் தாண்டுதல் போட்டியில் ஊர்க்காவல் படை வீரர் திரு. D. தினகரன் முதலிடம், கூட்டு கவாத்து போட்டியில் முதலிடம், முதலுதவி போட்டியில் முதலிடம், அலங்கார அணி வகுப்பில் முதலிடம், கயிர் இழுத்தல் போட்டியில் (மகளிர்) இரண்டாம் இடத்தையும் பெற்று விழுப்புரம் சரகம் ஊர்காவல்படைக்கு பெருமை சேர்த்தனர். விளையாட்டு போட்டிகளில் பங்குகேற்று கோப்பையை வென்ற ஊர்க்காவல் படையினரை கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. R. இராஜாராம் அவர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் சரக உதவி தளபதி திரு. கேதார்நாதன், ஊர்க்காவல் படை வட்டார தளபதி திரு. அம்ஜத்கான், துணை வட்டார தளபதி திருமதி. கலாவதி ஆகியோர் உடன் இருந்தனர்.

சிறப்பு நிருபர்: **இரா.சக்திவேல்** திருவண்ணாமலை



# திருச்சி மாநகரில் பொதுமக்கள் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழ

## காவல் ஆணையர் M.சத்தியபிரியா IPS நடவடிக்கை

திருச்சி மாநகரில் பொதுமக்கள் திருட்டு,வழிபறி, கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களால் பாதிப்படையாமல் பாதுகாப்பு விழிப்புணர்வுபெற மாநகர காவல் ஆணையர் திருமதி.M.சத்திய பிரியா IPS அவர்கள் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவும், குற்றச் சம்பவங்கள் ஏதும் நடைபெறா வண்ணம் முன்னெச்சரிக்கைத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும், திருச்சி மாநகரத்தில் பொதுமக்களிடமிருந்து காணாமல்போன செல்போன்களை கண்டுபிடித்து உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர் களுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

அதன்பேரில் காணாமல் போன செல்போன்கள் பற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுத்ததில், கன்டோன் மென்ட் சரக காவல்நிலைய எல்லையில் தொலைந்து போன 47 செல்போன்களும், தில்லைநகர் சரக காவல் நிலைய எல்லையில் தொலைந்து போன 45 செல்போன் களும், காந்தி மார்க்கெட் சரக காவல்நிலைய எல்லையில் தொலைந்து போன 43 செல்போன்களும், கே.கே.நகர் சரக காவல்நிலைய எல்லையில் 34 செல்போன்களும், ஸ்ரீரங்கம் சரக காவல் நிலைய எல்லையில் தொலைந்து போன 27 செல்போன்களும், பொன்மலை சரக காவல் நிலைய எல்லையில் தொலைந்து போன 3 செல்போன் களும், மாநகர சைபர் கிரைம் செல்லில் பெறப்பட்ட புகாரில் 2 செல்போன்கள் உட்பட ரூ.32 ,லட்சம் மதிப்புள்ள பல்வேறு கம்பெனிகளின் 201 ஆன்ட்ராய்டு செல்போன்கள் கண்டுபிடித்து மீட்கபட்டுள்ளது.

26.05.23-ந்தேதி திருச்சி மாநகர காவல் ஆணையரகத்தில் தொலைந்து போய் மீட்கபட்ட 201 செல்போன்களை அதன் உரிமையாளர்களிடம் திருச்சி மாநகர காவல் ஆணையர்M.சத்திய பிரியா,IPS அவர்கள் ஒப்படைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் காவல் ஆணையர் பேசுகையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் செல்போன் இன்றிய மையாத ஒன்றாக இருப்பதாகவும், செல்போனில் அனை வரும் பல தகவல் சேகரித்து வைத்துள்ளதாகவும், அது தொலைந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும், பொதுமக்கள் தங்களது செல்போன்களை பாது காப்பாக வைத்துக்கொள்ள வேண்டியது அவரவர் கடமை என்றும், பொதுமக்கள் இரு சக்கர வாகனத்தில் பய ணிக்கும் போது செல்போன்களில் பேசுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்றும் மேலும்பொதுமக்கள் பாது காப்பு விழிப்புணர்வுடன் செயல்ப்பட்டு குற்றசம்பவங்களை தடுக்க காவல்துறையுடன் ஒத்துழைக்கவேணடும் என்று அறிவுறுத்தினார்கள்.

மேற்படி செல்போனை பெற்றுக்கொண்ட பொதுமக்கள் திருச்சி மாநகர காவல் ஆணையரிடம் செல்போனை கண்டுபிடித்து தந்தது மூலம் பொக்கிஷமான பழைய நினைவுகளை திரும்ப பெற வழிசெய்து தந்துள்ளீர்கள் என கூறி மாநகர காவல் ஆணையர் அவர்களுக்கும், மாநகர காவல்துறைக்கும் தங்களது மனமார்ந்த நன்றி யினை தெரிவித்துக்கொண்டார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் காவல்துணை ஆணையர் திரு.சுரேஷ்குமார் அவர்கள் தலைமையிடம், காவல்துணை ஆணையர் திரு.அன்பு அவர்கள் வடக்கு மற்றும் காவல் உதவி ஆணையர்கள், அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் கலந்துக்கொண்டார்கள்.

சிறப்பு நிருபர்: **மு.பாண்டியராஜன்**

# நிதிநிறுவனம் நடத்தி பணமோசடி செய்த திருச்சி மாநகராட்சி கவுன்சிலர் கைது

திருச்சியை தலைமையிடமாக கொண்டு எல்பின் என்ற நிதி நிறுவனம் செயல்பட்டு வந்தது. மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், திருப்பூர், சென்னை, புதுச்சேரி ஆகிய பகுதிகளில் இதன் அலுவலகங்கள் இயங்கி வந்தன. இந்த நிறுவனத்தில் முதலீடு செய்தால் அதிக வட்டி கிடைக்கும், பணம் இரட்டிப்பாக மாறும் என்பது உள்ளிட்ட கவர்ச்சியான விளம்பரங்கள் மற்றும் பொய்யான வாக்குறுதிகளை மக்களிடம் கொண்டு சென்றனர். இதை நம்பி பொதுமக்கள் கோடிக்கணக்கில் இந்த நிறுவனத்தில் முதலீடு செய்தனர்.



பிரபாகரன்

மேலும் இந்த நிறுவனத்தின் கிளை நிறுவனங்களான 'ஸ்பாரோ குளோபல் டிரேட்', வராகமணி பிரைவேட், சென்னை, ஜேபி ஓரியண்ட் டெக் மார்க்கெட்டிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஆர்.எம். வெல்த் கிரியேஷன் பிரைவேட் லிமிடெட், இன்பி கேலக்ஸி மார்க்கெட்டிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் அறம் மக்கள் சங்கம் என பல துணை நிறுவனங்களையும் நடத்தி வந்தது. இந்த நிறுவனத்தினர் முதலீட்டாளர்களிடம் பல கோடி மோசடி செய்ததாக 10-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் வழக்குகள் பதியப்பட்டு இருந்தன.

இதற்கிடையே மதுரை ஐகோர்ட்டு உத்தரவின்பேரில் சிறப்பு புலனாய்வு பிரிவு அமைக்கப்பட்டது. அவர்கள், இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட முக்கியமானவர்களில் திருச்சி கீழப்புலிவார் ரோட்டை சேர்ந்த பிரபாகரன் (வயது 45) என்பவரும் ஒருவர் ஆவார். விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த பிரபாகரன், திருச்சி மாநகராட்சியின் 17-வது வார்டு கவுன்சிலராக உள்ளார்.

இந்தநிலையில் இந்த வழக்கில் நீண்டநாட்களாக தலைமறைவாக இருந்த பிரபாகரனை சிறப்பு புலனாய்வு குழு போலீசார் கைது செய்தனர்.

பின்னர் இவர் மதுரை யில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பொதுமக்கள் இவ்வாறான நிறுவனங்கள் மீது வைப்புநிதி திட்டங்களில் முதலீடு செய்யும் போது, அவர்களின் உண்மை தன்மை மற்றும் நம்பகத்தன்மையை அறிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

சிறப்பு நிருபர்: **மு.பாண்டியராஜன்**

## பழனி முருகன் கோவில் உண்டியலில் தங்க சங்கிலியை தவறவிட்டவருக்கு தனது சொந்த நிதியில் சங்கிலி வழங்கிய குழுத் தலைவர் மணிமாறன்



பழனி முருகன் கோவிலில் கேரோளவைச் சேர்ந்த சங்கீதா என்ற பெண் துளசி மாலையை கழற்றி உண்டியலில் செலுத்தும் போது ஒன்னே முக்கால் பவுன்தங்கச் சங்கிலி தவறுதலாக உண்டியலில் விழுந்துவிட்டது. பரிதவித்தஅப்பெண்ணின் ஏழ்மை நிலையை கருதி அறங்காவலர் குழு தலைவர் மணிமாறன் தனது சொந்த நிதியில் 17.60 கிராம் தங்கச்சங்கிலியை சங்கீதாவிற்க்கு வழங்கியது பக்தர்களிடம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியதுடன் பக்தர்கள் அனைவரும் பாராட்டி தலைவர்மணிமாறனுக்கு நன்றிதெரிவித்தனர்.

முதன்மை ஆசிரியர்: **S.முருகானந்தம்**



தூத்துக்குடி மாவட்டத்தில்

# சிறப்பு திறனாளிகளுக்கான மாநில அளவிலான அமர்வு கைப்பந்து போட்டி

## Dr.L.பாலாஜி சரவணன் SP தொடங்கி வைத்தார்

தூத்துக்குடி மாவட்ட சிறப்பு திறனாளிகள் விளையாட்டு சங்கத்தின் 10,ம் ஆண்டு விழாவை முன்னிட்டு தூத்துக்குடி சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மச்சாதுநகர் பகுதியில் உள்ள கேம்ஸ்வில் ஸ்போர்ட்ஸ் அகாடமியில் வைத்து சிறப்பு திறனாளிகளுக்கான மாநில அளவிலான அமர்வு கைப்பந்து போட்டி (28.05.2023) நடைபெற்றது. இப்போட்டியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.L.பாலாஜி சரவணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு துவங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் தூத்துக்குடி, ராமநாதபுரம், மதுரை, தேனி உட்பட 16, மாவட்டங்களிலிருந்து 16 ,அணிகளைச் சேர்ந்த வீரர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பேசுகையில், விளையாட்டில் ஜெயிக்கலாம், தோற்கலாம் ஆனால் அதில் ஈடுபாடுடன் விளையாடுவதே முக்கியம். நீங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் மனமகிழ்ச்சியோடு நேர்மறையான சிந்தனைகளுடன் இருக்க வேண்டும். மேலும் கடின உழைப்புக்கு ஈடு இணையே இல்லை, எப்போதும் எதிர்மறையான எண்ணங்களை தவிர்த்து நேர்மறையான எண்ணங் களுடன் இருக்க வேண்டும். நீங்கள் எதுவாக இருக்க வேண்டும் என்று நேர்மறையான எண்ணங்களுடன் இருக்கிறீர்களோ அதுவாகவே மாறுவீர்கள்.

வெற்றி என்பது பணம், பதவி கிடையாது, அவைகளைத் தாண்டி உங்கள் திறமையை வெளி உலகத்திற்கு காட்டி தன்னம்பிக்கைக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டும். சிறப்பு திறனாளிகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த விளையாட்டுப் போட்டியை ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி தனது சிறப்புரையை நிறைவு செய்தார்.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை தூத்துக்குடி மாவட்ட சிறப்பு திறனாளிகள் விளையாட்டு சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு.துரை என்.பாண்டியன் தலைமையில் அதன் உறுப்பினர்கள் செய்திருந்தனர். இப்போட்டியில் கேம்ஸ்வில் ஸ்போர்ட்ஸ் அகாடமி நிறுவனர் திரு. தாஸ், தூத்துக்குடி மாவட்ட சிறப்பு திறனாளிகள் விளையாட்டு சங்கத்தின் தலைவர் திரு. யோகீஸ், செயலாளர் திரு. வெற்றி மற்றும் போலீசார் உடனிருந்தனர்.

நிருபர்: **முத்துபாண்டி**,தூத்துக்குடி

---




# விளம்பர கட்டண விபரம்

| | |
|---|---|
| கலர் பின் அட்டை முழு பக்கம் | - ரூ.20,000 |
| கலர் பின் அட்டை உள் பக்கம் | - ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் முழு பக்கம் | - ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் அரை பக்கம் | - ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே முழு பக்கம் | - ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே அரை பக்கம் | - ரூ.6,000 |

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438







# திருச்சி இரண்டு பிரபல எண்ணெய் தயாரிப்பு நிறுவனத்துக்கு 'சீல்'

## 4,500 லிட்டர் சமையல் எண்ணெய் பறிமுதல்

27.05.2023 சனிக்கிழமை திருச்சிராப்பள்ளி மாவட்டம் மேலப்புலிவார் ரோட்டில் உள்ள பிரபல இரண்டு எண்ணெய் தயாரிக்கும் நிறுவனத்தில் கடந்த வருடங்களிலிருந்து தொடர் ஆய்வுகளும் தொடர் உணவு மாதிரிகளும் எடுக்கப்பட்டு வந்தன. அதில் பல வழக்குகள் அந்த நிறுவனத்தின் மீது நடைபெற்று வருகிறது. மேலும், நிறுவனத்தின் குறைகளை நிவர்த்தி செய்ய உணவு பாதுகாப்பு சட்டம் பிரிவு 55-இன் கீழ் தொடர்ந்து ஆறுமாத காலமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டும் குறைகளை நிவர்த்தி செய்யாமல் இருந்து வருகின்றனர்.

மேலும், அந்நிறுவனம் உணவு பாதுகாப்பு துறையின் மூலம் 06.04.2023 அன்று தயாரிப்பு நிறுத்தம் நோட்டீஸ் (STOP SALE NOTICE ) கொடுக்கப்பட்டு அந்நிறுவனத்தின் உரிமம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது. இந்த சூழ்நிலையில் அந்த நிறுவனத்தினர் சட்டத்திற்கு புறம்பாக பொய்யான தகவலை கொடுத்து உரிமம் பெற்றிருந்ததும் ஆய்வின்போது கண்டறியப்பட்டு உரிமம் ரத்து செய்யப் பட்டது. அதனை தொடர்ந்து மேலும் அவர்கள் தொடர்ச்சியாக எண்ணெய் தயாரித்து வந்தது தெரியவந்தது. உணவு பாதுகாப்பு துறையின் லேபில்லிங் மற்றும் தயாரிப்பு விதிமுறைகளை பின்பற்றாமல் விற்பனை செய்து வந்தது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் டாக்டர் R.ரமேஷ்பாபு அவர்கள் தலைமையில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் கொண்ட குழு மற்றும் கிராம நிர்வாக அலுவலர் லட்சுமிப்ரியா அவர்களும் உடனிருந்து ஆய்வு செய்ததில் முறையான உரிமம் இல்லாமலும் சுகாதாரமற்ற முறையிலும் தயாரிப்பு இடங்களில் அசுத்தங்கள் மண் கழிவுகள்,எலி மற்றும் கரப்பாண்பூச்சி வந்து செல்லும் வண்ணம் இருந்ததை அடுத்து தற்காலிக அவசர தடையாணை அறிவிப்பு மூலமாக அந்த நிறுவனதின் தயாரிப்பு மற்றும் விற்பனை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு சுமார் 4,500 லிட்டர் சமையல் எண்ணெய் பறிமுதல் செய்யப்பட்டு வழக்கு போடுவதற்காகநான்குஉணவுமாதிரிகள்எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட நியமன அலுவலர் அவர்கள் கூறுகையில் இதுபோன்ற சரியான தயாரிப்பு மற்றும் காலாவதி தேதி இல்லாமலும், முறையான லேபில்லிங் இல்லாமலும் பாதுகாப்பற்ற மற்றும் சுகாதாரமற்ற முறையிலும் எண்ணெய் தயாரித்து தங்களது பகுதிகளில் காணப்பட்டால் கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

சிறப்பு நிருபர்: **மு.பாண்டியராஜன்**

### புகார் தெரிவிக்க...

**டாக்டர் R.ரமேஷ்பாபு MBBS,**
**மாவட்ட நியமன அலுவலர்**
**உணவு பாதுகாப்பு துறை,**
**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**
**தொலைபேசி எண்:**
**9944959595, 9585959595**
**மாநில புகார் எண்: 9444042322**



# கள்ளச் சாராயம் விற்றால் குண்டர் சட்டம்

## நாகப்பட்டினம் SP ஹர்ஷ்சிங் IPS எச்சரிக்கை



நாகப்பட்டினம் மாவட்டதில் கள்ளச்சாராயம் விற்பனை மற்றும் கடத்தல் ஆகியவற்றினை கட்டுப்படுத்தும் விதமாக நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஹர்ஷ் சிங் IPS, அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படை போலிசாரால் தீவிர மதுவிலக்கு வேட்டை நடத்தப்பட்டு பல்வேறு மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தனிப்படை போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் வேட்டைக்காரனிருப்பு காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் 200, லிட்டர் கள்ள சாராய ஊறல்களை காவல்துறையினர் கைப்பற்றி னார்.

மேலும் இக்குற்றச்சம்பவத்தில் ஈடுப்பட்ட M.குழந்தை வேலு கண்டியன்காடு, வேட்டைக்காரனிருப்பு. என்ற நபரை காவல்துறையினர் கைது செய்தனர். மேலும் இக் குற்றச்சம்பவம் குறித்து நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஹர்ஷ்சிங் IPS அவர்கள் சம்பவ இடத்தை நேரில் சென்று ஆய்வு செய்தார் இதுபோன்ற குற்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்றும் குற்றவாளிகள் அதிரடியாக குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

சிறப்பு நிருபர்: **S.மணிகண்டன்**

## கடலூர் மாவட்டத்தில்

# இணையதளம் மூலம் பறிகொடுத்த பணத்தை மீட்டு கொடுத்த R.ராஜாராம் SP

சத்யபிரியா வயது 34 த/பெ சக்கரவர்த்தி, முத்தாண்டி குப்பம்,கடலூர். என்பவருக்கு இணையதள மூலம் வங்கியில் லோன் வாங்கி தருவதாக தொடர்பு கொண்ட நபர் கூறியதால் சத்யபிரியா என்பவர் ரூபாய். 29,435 பணத்தை ரேஸர் பே (Razor pay)மூலம் அனுப்பிய தாகவும் அதன் பிறகு மேற்க்கண்ட லோன் வாங்கி தருவதாக சொல்லி அழைத்த நபரை தொடர்பு கொள்ள முடியவில்லை எனவும் நடவடிக்கை எடுக்குமாறு சத் யபிரியா கொடுத்த புகாரின்பேரில்.

கடலூர் மாவட்ட காவல்கண்காணிப்பாளர் திரு. இரா. இராஜாராம் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பிறப்பித்த உத்தரவின்பேரில் இணையவழி குற்றப்பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. சீனி வாசலு அவர்கள் மேற்பார்வையில், காவல் ஆய்வாளர் திருமதி.கவிதா மற்றும் போலீசார் மேற்படி ரேஸர்பே தனி அலுவலகத்தை தொடர்பு கொண்டு மேற்படி கணக்கில் வரவு வைக்கப்பட்ட பணம் தங்களது நிறுவனத்தின் மூலம் ஏமாற்றியது எனவும், எனவே பணத்தை பாதிக்கப் பட்ட வங்கி கணக்கில் திரும்ப செலுத்துமாறு அறிவுறுத்திய



தின் பேரில் மேற்படி நபரின் கணக்கிலிருந்து 29,435 .பணம் திரும்ப அனுப்பி வைக்கப்பட்டதால் கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா. இராஜாராம் அவர்கள் பாதிக்கப்பட்ட சத்யபிரியா அவர்களிடம் அலு வலகத்திற்கு நேரில்வரவழைத்து பணத்தை ஒப்படைத் தார்.

சிறப்பு நிருபர்: **P.முத்துக்குமரன்**கடலூர்

# கள்ளச்சாராயம் விற்பனை முழுமையாக தடுக்கப்படும்

## புதிதாக பொறுப்பேற்ற DIG ஜியாவுல் ஹக் IPS அறிவிப்பு

விழுப்புரம் காவல் சரகத்தில் கள்ளச்சாராய விற்பனை முழுமையாக தடுக்கப்படும் என புதிதாக பொறுப்பேற்ற DIG ஜியாவுல்ஹக் அறுவித்துள்ளார்.

விழுப்புரம் காவல் சரக DIG பணியிடம் ஒரு மாத காலமாக காலியாக இருந்தது இந்த நிலையில் CBCID. DIG யாக பணிபுரிந்து வந்த திரு.ஜியாவுல் ஹக் விழுப்புரம் சரக DIG யாக நியமிக்கப்பட்டார். இதையடுத்து அவர் விழுப்புரத்தில் உள்ள DIG அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவருக்கு மாவட்ட காவல்கண்காணிப்பாளர் ,மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர்கள் , இன்ஸ்பெக்டர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர் பின்னர் DIG. கூறியதாவது

### பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்

விழுப்புரம் காவல் சரகத்திற்க்குட்ப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், ஆகிய 3 மாவட்டங்களிலும் சட்ட விரோத செயல்கள், குற்ற சம்பவங்களை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் குறிப்பாக கள்ளச்சாராயம், சாராய ஊறல்,, லாட்டரி சூதாட்டம், ரவுடிசம், போன்ற சம்பவங்கள் முழுமையாக தடுக்கப்படும் இதற்க்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு தேவை பொதுமக்கள் அளிக்கும் தகவல்களின் ரகசியங்கள் பாதுகாக்கப்படும் அவர்கள் பெயர் ஒருபோதும் வெளியிடப்பட மாட்டாது எனவே பொதுமக்கள் சட்டவிரோத செயல்களை தடுக்க காவல்துறைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

மேலும் ரவுடிசம் ஒழிக்கப்படும் காவல்கண்காணிப்பாளர் அலுவலகங்கள், துணை காவல் கண்காணிபாளர்கள் அலுவலகங்கள் மற்றும் காவல் நிலையங்களில் பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட போலீசார் நேரில் சென்று விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பார்கள் சிவில் வழக்குகளை தவிர குற்ற வழக்குகளுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் ரவுடிசம் ஒழிக்கப்பட்டு தொடர்ந்து அவர்கள் கண்காணிக் கப்படுவார்கள் புதுச்சேரியில் இருந்து மது பாட்டில்கள் கடத்தலை தடுக்க ஏற்கனவே சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள் இந்த சோதனை சாவடிகளில் போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்படும்.



***புதுச்சேரியில் இருந்து மது பாட்டில்கள் கடத்தலை தடுக்க ஏற்கனவே சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள் இந்த சோதனை சாவடிகளில் போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்படும்.***

மேலும் கள்ளச்சாராயம் குறித்து கிராமப்புறங்களில் மக்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை முற்றிலும் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு DIG கூறினார். அப்போது கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. மோகன்ராஜ், கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ராஜாராம் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

நிருபர்: **ராமநாதன்,** விழுப்புரம்

**விமர்சனம் மற்றும் வாசகர் கடிதம், கதை, கவிதை, கட்டுரை வரவேற்கப்படுகிறது. அதனை தேர்வு செய்து வெளியிடப்படும்...**



# திருமாலின் தசாவதாரத்தில்

# மச்ச அவதாரம் நோக்கமும், சிறப்பும்

நம் அகண்ட பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். பூமியெங்கும் பல அசுர சக்திகள் வேறு உலகத்தில் இருந்து பூமியில் இறங்கி உயிர்களுக்கும் மனிதர்களுக்கும் துன்பம் கொடுத்து தர்மத்தை அழித்து அதர்மத்தை நிலை நாட்டப் பார்க்கும் பொழுது அந்த அசுர சக்தியான அதர்மத்தை அழித்து தர்மத்தை காக்க பரந்தாமன் திருமால் பூமியில் அவதாரம் எடுக்கின்றார்.

ஒவ்வொரு யுகத்திலும் தீய சக்திகள் பூமியை ஆக்கிரமிக்கும்போது அவற்றை அழிப்பதற்காக விஷ்ணு பகவான் பூமியில் அவதாரம் செய்கிறார். அப்படி தர்மத்தை காக்க அவதாரம் எடுத்ததை தசாவதாரமாக சொல்கின்றோம்.

ஏற்கெனவே ஒன்பது அவதாரங்கள் முடிந்துவிட்டது. பத்தாவதாக கல்கி அவதாரம் இனிமேல் நடக்கப்போகும் அவதாரம் ஆகும்.

திருமாலின் பத்து அவதாரங்கள் என்னென்ன என்று பார்ப்போம்.

**தசாவதாரங்கள்**

1. மச்ச அவதாரம் – மீன் வடிவம்
2. கூர்ம அவதாரம் – ஆமை வடிவம்
3. வராக அவதாரம் – பன்றி வடிவம்
4. நரசிம்ம அவதாரம் – சிங்கம் வடிவம்
5. வாமன அவதாரம் – குறுகிய வடிவம்
6. பரசுராம அவதாரம் – கோடாரியோடு வடிவம்
7. ராம அவதாரம் – வில்லோடு வடிவம்
8. பலராம அவதாரம் – கலப்பையோடு வடிவம்
9. கிருஷ்ண அவதாரம் – புல்லாங்குழல்
10. கல்கி அவதாரம் – கையில் வாள் கொண்ட வடிவம்

என்று பத்து அவதாரங்களாகப் புறோற்றப்படுகின்றன.

ஒவ்வொரு அவதாரங்களும் ஏன் எடுக்கப்பட்டது, அது எந்த யுகத்தில் நடந்தது. ஒவ்வொருஅவதாரங்களின் கோவில்கள் எங்கு உள்ளது, அதை நாம் எப்படி வழிபடுவது என்று ஒவ்வொன்றாக பார்ப்போம்.

திருமாலின் பத்து அவதாரங்களில் முதல் அவதாரம் மச்ச அவதாரம்.

**முதல் அவதாரம்: மச்ச அவதாரம்**

பிரபஞ்சம் முழுவதும் பலகோடி அண்டங்களும், பலகோடி சிற்றண்டங்களும் பலகோடி பேரண்டங்களும் இருக்கின்றன.

பஞ்ச பூதங்களில் உலகம் இயங்குகின்றது. பஞ்ச பூதங்களிலஸ் உலகங்களும் கோள்களும் உள்ளன.

பஞ்ச பூதங்கள்: நிலம் – பிருதிவி, நீர் – அப்பு, நெருப்பு – தேயு, காற்று – வாயு, வெளி – ஆகாயம் என ஐந்து பெரும் பஞ்ச பூதங்கள் என்கின்றோம்.

நிலம்: உலங்கள் பூமியைப் போல் ஆயிரம் மடங்கும் பெரிதான நிலப்பரப்பு கொண்ட உலகமான கோள்களும் பிரபஞ்சத்தில்உள்ளது. அவைகள் எல்லாம் நிலவுலகம் என்பார்கள்.

நீர்: பூமியில் இருப்பதுபோல் இலட்சம் மடங்கு கடல் நீர் உள்ள நீர் உலகமும் இருக்கின்றது. அவைகள் நீர்க்கோள்கள் என்பர். இந்த பிரபஞ்சத்தில் பூமியைப் போல் பல ஆயிரம் பூமியை மூழ்கடிக்கக் கூடிய கடல் நீர்க் கோள்களும் சுற்றிக் கொண்டுதான் இருக்கின்றன. இதை கடல் உலகம் என்பார்கள்.

நெருப்பு: உலகங்கள் நம்முடைய சூரியனை விட ஆயிரக்கணக்கான மடங்கு பெரிதான நெருப்புக் கோள்களும் பிரபஞ்சத்தில் சுற்றிக் கொண்டுதான் இருக்கின்றது. இவற்றை நெருப்பு உலகம் என்பார்கள்.

காற்று: நம் பூமியில் உள்ள காற்றைப்போன்று நம் பூமியை விட இலட்சம் மடங்கு பெரிதான காற்று மட்டும் நிறைந்த வாயு உலகங்களும் இந்தப் பிரபஞ்சத்தில்உள்ளது. இவற்றை பெரும் வாயு உலகம் என்பார்கள்.

ஆகாயம்: ஆகாயம் எல்லா இடத்திலும் வியாபித்து உள்ளது. அண்டத்திலும் உள்ளது. இதை கண்ணுக்குத் தெரியாத சூட்சம உலகம் என்பார்கள். மேலே சொன்ன நான்கு உலகங்களுக்கும் ஆகாய உலகத்திற்குள் அடங்கும். இவற்றை சூட்சம உலகம் என்பார்கள்.

ஆனால், நம் பூமியில் ஐந்து பூதங்களும் சேர்ந்து உள்ளது. இது கர்ம பூமியாகும். நாம் செய்யும் பாவ, புண்ணியத்தின் அளவின்படி பலன் கிடைக்கும் பூமியாகும்.

**யுகங்கள் நான்கு:**

1. கிருத யுகம் – 17,28,000 ஆண்டுகள்
2. திரோதாயுகம் – 12,96,000 ஆண்டுகள்
3. துவாபர யுகம் – 8,64,000 ஆண்டுகள்
4. கலியுகம் – 4,32,000 ஆண்டுகள்

இந்த நான்கு யுகங்களும் சேர்ந்து முடியும்போது ஒரு சதுர்யுகம் என்பார்கள். இதை மகாயுகம் என்றும் சொல்வார்கள். 71 மகா யுகங்கள் சேர்ந்தது 1 மன் வந்திரம் ஆகும். 14 மன் வந்திரங்கள் சேர்ந்தது ஒரு கல்பம் ஆகும். இதேபோல் 30 கல்பங்கள் உள்ளன.

**கல்பங்கள் – 30**

1. வாம தேவ கல்பம், 2.சுவேத கல்பம், 3. நீல லோகித கல்பம், 4. ரந்திர கல்பம், 5.ரௌரவ கல்பம், 6.தேவ கல்பம், 7. விரக கிருட்டிண கல்பம், 8. கந்தற்ப கல்பம், 9. சத்திய கல்பம், 10.ஈசான கல்பம், 11. தமம் கல்பம், 12.சாரசுவத கல்பம், 13. உதான கல்பம், 14. காருட கல்பம், 15. கௌரம கல்பம், 16. நரசிம்ம கல்பம், 17. சமான கல்பம், 18. ஆக்நேய கல்பம், 19. சோம கல்பம், 20. மானவ கல்பம், 21. தப்புருச கல்பம், 22.வைகுண்ட கல்பம், 23. லெச்சுமி கல்பம், 24. சாவித்ரி கல்பம், 25. கோர கல்பம், 26. வராக கல்பம், 27. வைராக கல்பம், 28. கௌரி கல்பம், 29.மகேந்திர கல்பம், 30. பிதிர் கல்பம் என்று முப்பது வகைப்படும்.

**கல்ப காலம்:**

ஒரு கல்ப காலம் என்பது பிரம்மனின் ஒரு பகல் மட்டும் குறிக்கும். பகலுக்கு சமமான இரவும் உண்டு. இரவு காலங்களில் எந்தப் படைப்பும் இருக்காது. பகல் என்பது பிரபஞ்சத்தின் பகலாகும். இரவு என்பது பிரபஞ்சத்தின் இரவாகும். பிரபஞ்சம் வெளிச்சத்தோடு இருத்தல் பகலாகும். வெளிச்சம் ஒடுங்கி ஆகாய வெளியில் ஒடுங்குவது இருளாகும். இரவே பிரம்மனின் தூக்கமாகும். கோடிக்கணக்கான பிரம்மாக்கள் இருப்பதாக காக புசுண்டர் கூறுகின்றார்.

ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒவ்வொரு பிரம்மா படைக்கும் தொழிலைச் செய்கின்றனர். கோடிக்கணக்கான அண்டங்களுக்கும் கோடிக்கணக்கான பிரம்மாக்கள் இருக்கின்றார்கள்.

நம்முடைய பூமியைபோல கோடிக்கணக்கான பூமி நம் அண்ட வெளியில் இருக்கின்றது. இவைகள் அழிந்து அழிந்து மீண்டும் இன்னொரு இடத்தில் தோன்றக் கூடியது. பிரபஞ்சத்தை ஐந்து சக்திகள் இயக்குகின்றது என்று திருமூலர் கூறுகின்றார்.

1. படைத்தல், 2. காத்தல், 3. அழித்தல் 4. மறைத்தல், 5.அருளல் என்று கூறுகின்றார்.

இந்த பிரம்மாவின் இருளான கல்ப காலங்களில் தீய அசுர பெருஞ்சக்திகள் கோள் உலகங்களை அழிக்கவும், மறைக்கவும் போன்ற வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கும். அந்த ஆபத்து சமயங்களில் அனைத்து உலகங்களிலும் காத்து தீய சக்திகளை அழிப்பவர் திருமால்.

**பிரம்மாவின் உறக்க காலம்:**

கிருத யுகத்தில் படைப்பு கடவுளான பிரம்மா உறக்க காலத்தில் இருந்தார். அவருடைய கொட்டாவிக் காற்றினால் வேதங்கள் உருவாகின. பிரம்மாவின் கல்ப காலம் நடக்கும்போது பூமிக்கு கிருதயுகம் நடந்து கொண்டிருந்தது. பிரம்மாவுக்கு இரவு ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

**சோமுகாசுரன் வேதங்களை திருடுதல்:**

அப்பொழுது வேறு அண்டத்தில் இருந்து வந்த அரசு தீய சக்தியான சோமுகாசுரன் என்ற அயக்கிரீவன் என்னும் குதிரை முகம் கொண்ட அரக்கன், தன் யோக சித்தியினால் அந்த வேதங்களைத் திருடி அண்ட வெளியில் இருக்கும் நீர்க்கோளமான கடல் உலகத்தில் ஒளித்து வைத்து விட்டான். அது பிரம்மாவின் தூக்க கல்பமாக இருந்தது. பிரம்மா இந்த நிகழ்வை அறியாமல் தூங்கி விட்டார். வேதம் இல்லை என்றால் அறம் ஒழுங்காக நடக்காது.

ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒவ்வொரு பிரம்மா உண்டும். நம் இருக்கக் கூடிய அண்டத்தின் பிரம்மா தூங்கும்போது இது நடக்க ஆரம்பித்தது. பிரம்மா உறங்கும்போது தான் பிரளயம் அண்டத்தில் ஏற்படும். ஆழிப் பேரலைகளாலும் அண்டத்தில் உள்ள நீராலும் அண்டத்தில் உள்ள உலகங்கள் நீரில் மூழ்கிவிடும்.

**கிருத யுக ஜல பிரளயம்:**

பூமியில் கிருதயுகம் நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது நம் பூமியல் மனிதர்கள் குமரிக் கண்டத்தில் வாழ்ந்தார்கள். முதன் முதலில் மனிதன் வாழ்ந்த கண்டம் குமரி கண்டமாகும். அந்தக் குமரி கண்டத்தில் சிவனை வழிபடுபவர்களும் வாழ்ந்தார்கள். திருமாலை வழிபடுபவர்களும் வாழ்ந்தார்கள்.

அந்தக் குமரி கண்டத்தில் மனு என்ற தமிழ் மன்னரும் வாழ்ந்துவந்தார். அவர் திருமால் மேல் பற்று கொண்டவர். இவர் உணவு உட்கொள்ளாமல் தண்ணீரை மட்டுமே அருந்து திருமாலை வழிபட்டுக் கொண்டு நீதியாக வாழ்ந்து வந்தார். இவருக்கு சத்திய விரதன் என்ற பெயரும் உண்டு.

மனு ஒரு நாள் ஆற்றுக்குச் சென்று, தன் மூதாதையர்களுக்கு தண்ணீரை இறைத்து தர்ப்பணம் செய்யும் போது, இரு கைகளாலும் தண்ணீரை எடுத்தார். அவர் கைகளில் ஒரு மீன் குஞ்சு அழகாக நீந்திக் கொண்டு இருந்தது. அதைக் கண்டு மகிழ்ந்தார் மனு. அந்த மீன் பேசியது, “ராஜாவே, என்னை மீண்டும்

ஆற்றுக்குள் விடாதீர்கள். பெரிய மீன்கள் என்னை விழுங்கிவிடும். என்னை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள்'' என்றது.

மனுவும் தான் கொண்டு சென்றிருந்த கமண்டலத்திற் குள் அந்த மீனை போட்டு, அரண்மனைக்கு எடுத்து வந்தார். அன்று இரவே அந்த மீன் கமண்டல அளவு வளர்ந்துவிட்டது. இந்தப் பாத்திரம் எனக்கு போதவில்லை என்றது. உடனே மீனை எடுத்து அருகில் இருந்த குளத்தில் விட்டார். அதுவும் வெகுசீக்கிரமாய் வளர்ந்தது. பின்பு அந்த மீனை ஆழமான அகலமான ஏரியில் போட்டார். மீண்டும் அது ஏரியின் அளவு வளர்ந்துவிட்டது.

கடைசியாக சமுத்திரத்தில் கொண்டு போய் விட்டார். அந்த மீன் மீண்டும் கூறியது, ``மனு முனிவரே, கடலில் விடாதே, பெரிய திமிங்கிலங்கள் உள்ளது உங்களுடன் என்னை கூட்டிச் செல்லுங்கள்'' என்றது.

அதற்கு மனு, இரு கைகூப்பி வணங்கினார். பரம்பொருளே மீனாக வந்து என்னை சோதிக்காதீர். இன்னும் வளர்ந்தால் விடுவதற்கு இடம் இல்லை என்னை சோதிக்க வந்த காரணம் என்ன திருமாலே என்றார்.

அதற்கு அந்த மச்ச மூர்த்தி பேசினார், ``இன்னும் ஏழு நாளில் இந்த பூமி முழுவதும் மழை நீராலும், கடல் கோளாலும் கடல் சுனாமியாலும் நீருக்குள் மூழ்கப் போகின்றது. அதனால், நீ நாவாய்களை தயாரித்துக் கொள். இந்த குமரிக் கண்டத்தில் உள்ள மக்கள் அனைவரையும் நாவாய்களை உருவாக்கச் சொல். அதில் அனைத்து விதமான தானிய விதைகளையும், செடிகளையும், அனைத்து உயிர்களையும் ஏற்றிக் கொள்ளச் சொல், நீ பெரிய நாவாயை உருவாக்கி, அனைத்து மக்களையும் ஏற்றிக் கொள். வாயாக நீர் வர ஆரம்பித்ததும், நாவாய் மிதக்கும். அதை வாசுகி பாம்பால் என் கொம்பில் கட்டு, பிரம்மன் தூக்கம் விழிக்கும் வரை ஜலப் பிரளயம் எல்லா உலகங்களிலும் இருக்கும். நல்லவர்களைக் காக்க நானே மச்சமாக எல்லா உலகங்களிலும் வந்து உயிர்களை காப்பேன் ''என்றார்.

இந்தச் செய்தியை மக்கள் எல்லோருக்கும் கூறினார். மக்கள் பலர் நம்பவில்லை. நம்பியவர்கள் மனுவின் நாவாய் கப்பலில் ஏறினார்கள். ஜலப் பிரளயம் ஆரம்பித்தது. நம்பாதவர்கள் குமரிக் கண்ட கடல் கோள், ஜலப்பிரளயத்தில் அழிந்தார்கள்.

அப்பொழுது மனு முனிவரின் நாவாய் கப்பல் மிதக்க ஆரம்பித்தது. அவரோடு சேர்ந்து வேறு நாவாய்களும் மிதந்தன. மனுவின் நாவாய் மிகப்பெரிதாக இருந்தது. சிறு கப்பல்களை அதோடு இணைத்தார்கள். ஜலம் பூமி முழவதும் நிறைந்தது. விஷ்ணு பகவான் மச்ச மூர்த்தியாக நீரில் நீந்தி வந்தார். நாவாய் கப்பலை மீனின் கொம்பினில் மனு கட்டினார். பிரம்மனின் நித்திரை காலம் முழுவதும் நீரில் மிதந்தது.

பிரம்மாவின் நித்திரை காலம் முடிந்து நீர் வற்ற ஆரம்பித்து விட்டது. நிலப்பரப்பு தெரிய ஆரம்பித்துவிட்டது. மனுவின் நாவாய்களை மச்ச மூர்த்தி கரையில் விட்டார். சிறு சிறு கப்பல்களை பூமியின் பல பகுதிகளில் இழுத்துச் சென்று நிலப்பரப்பில் விட்டார். பூமியின் பல இடங்களிலும் மனித இனம் வளர ஆரம்பித்தார்கள். பிரம்மன் நித்திரை



முடிந்த வெளிச்சம் வர ஆரம்பித்தது. பிரம்மன் தன் வேதங்கள் மறைக்கப்பட்டதை கண்டார். திருமாலை நோக்கி தவம் செய்தார். மச்ச மூர்த்தியாக இருந்த திருமால் நீர் உலகத்தின் ஹயக்கிரீவன் ஒளித்து வைத்திருந்த வேதங்களை கண்டார். பின்பு நீர் உலகத்தில் உள்ளே மீனாகச் சென்று அந்த தீய சக்தி அசுரனை அழித்து வேதத்தை மீட்டு பிரம்மாவிடம் ஒப்படைத்தார்.

மீண்டும் பிரம்மா தன் தொழிலைச் செய்யத் தொடங்கினார். பூமியில் கிருத யுகத்தில் வந்த மச்ச மூர்த்தி அனைவருக்கும் அருள்புரிந்து மறைந்தார். மச்ச மூர்த்தி மந்திரங்களைச் செபித்து அவர் பூசை செய்யும் போது நம்முடைய அனைத்து தடைகளும் விலகி நன்மை நடக்கும். அதர்மம் எங்கு தோன்றினாலும், அதை அழித்து தர்மத்தை நிலை நாட்ட பூமியில்பகவான் விஷ்ணு அவதரிப்பார். அதர்மம் தோன்றி தர்மம் எங்கு குறைகிறதோ அங்கு அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்ட மீண்டும் ஒவ்வொரு யுகத்திலும் வருவேன் என்று பகவத் கீதையில் கிருஷ்ணர் கூறுகின்றார்.

***அதர்மம் அழிந்து தர்மம் வளரட்டும்.***




**ஓம் காளி ஓம் நமசிவாய**

# கருடசித்தர்

**Dr.பாலகிருஷ்ண சுவாமி**

**எரசை, தேனி மாவட்டம்.**

## கல்வராயன் மலைப்பகுதியில்

# கள்ள சாராய வேட்டையில் ஈடுபட்ட கள்ளக்குறிச்சி SP N.மோகன்ராஜ்



கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. N.மோகன்ராஜ் அவர்கள் கள்ளக்குறிச்சி மாவட்டம் முழுவதும் சட்டவிரோதமாக கள்ளச்சாரயம் கடத்தல் மற்றும் விற்பனை செய்தால் கைது செய்ய தனிப்படை அமைத்து மாவட்டம் முழுவதும் அதிரடி சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரடி தலைமையில் தனிப்படை காவலர்கள் அதிகாலை முதல் கல்வராயன்மலை பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது குரும்பாலூர் கடுக்கம்பட்டு ஓடையில் மறைத்து வைத்திருந்த கள்ளச் சாராயம் காய்ச்ச பயன்படும் புளித்த சாராய ஊறல் 500,லிட்டர் வீதம் பிடிக்கக்கூடிய 07 பிளாஸ்டிக் பேரல் களில் 2,500 லிட்டர் சாராய ஊறல் கண்டுபிடித்து சம்பவ இடத்திலேயே கொட்டி அழிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சமுதாயத்தை சீர் குலைக்கும் கள்ளச்சாராயம் மற்றும் கஞ்சா விற்பனை போன்ற சட்டத்திற்கு புறம்பான குற்ற செயல்களில் ஈடுபடு வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் N.மோகன்ராஜ் அவர்கள் எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

நிருபர்: **ராமநாதன்,** கள்ளக்குறிச்சி

## *பணியின்போது விபத்தில் இறந்துபோன SI பிச்சைமணி குடும்பத்தினருக்கு SBI காப்பீடு மூலம் ரூ.30 லட்சம் பெற்றுத் தந்த V.பாஸ்கரன் SP*




விபத்தில் இறந்து போனதிண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.பிச்சைமணி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது வாகன விபத்தில் உயிரிழந்தார். இதையடுத்து, அவரின் வங்கி கணக்கு (Police Salary Package) உடன் இணைக்கப்பட்டுள்ளதால் SBI வங்கி சார்பாக விபத்து காப்பீட்டுத் தொகையாக ரூ.30,00,000 த்திற்க்கான காசோலையை (25.05.2023) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.V.பாஸ்கரன் அவர்கள் முன்னிலையில் உயிரிழந்த திரு.பிச்சைமணி அவர்களின் குடும்பத்தினரிடம் வழங்கினார்கள்.

நிருபர்: **P.சதீஷ்**

# குதிரைவாலி அரிசி மருத்துவப் பயன்கள்

இயற்கை வாழ்வியலும் உடல்நலமும்

குதிரைவாலி மற்ற சிறுதானியங்களைவிட அளவில் மிகமிகச் சிறியது. தோல் நீக்கப்பட்டு கிடைக்கிறது. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரியது என்பதற்கு மிகச்சிறந்த உதாரணம் குதிரைவாலி. குதிரைவாலி கோதுமையை விட ஆறுமடங்கு நார்ச்சத்து உள்ளது. புரோட்டீன், மாவுச்சத்து, கால்யிம், பீட்டா கரோட்டீன், 47 மில்லி கிராம் தயமின், ரிபோப்ளோவின் ஆகிய சத்துகளும் உள்ளன.


குதிரைவாலியில் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் தன்மை உண்டு. செரிமான குறைகள், ரத்த சோகை முதலியவற்றை குணப்படுத்துகிறது. சிறுநீரை அதிகமாகப் பெருக்கும் சக்தி இதற்கு இருப்பதால், உடம்பில் உள்ள உப்பை கரைக்கும் தன்மை உண்டு. கண் குறைபாடுகளை சீர் செய்யும் பீட்டா கரோட்டீன் இதில் அதிகமாக உள்ளது, மற்றும் ஆன்டி ஆக்ஸிடென்ட் ஆக வேலை செய்கிறது.

ஊட்டச் சத்துகள் மிகுந்த குதிரைவாலி அரிசியில் நார்ச்சத்து மற்றும் இரும்பு சத்து அதிகமாக உள்ளது. உடலில் மலச்சிக்கலை தடுப்பதிலும், கொழுப்பு அளவை குறைப்பதிலும் செரித்தலின்போது ரத்தத்தில் இருந்து குளுக்கோஸ் அளவை மெதுவாக வெளியிடுவதற்கும் உதவுகிறது. இதய நோயாளிகள் மற்றும் சர்க்கரை நோயாளிகளுக்கு நல்ல உணவாகப் பயன்படுகிறது.

உடலில் கபத்தின் ஆதிக்கம் அதிகரித்து, அதனால் அடிக்கடி சளி, காய்ச்சலால் அவதிப்படுவார்கள். குதிரைவாலி அரிசியை சமைத்து உண்ணலாம். இதனால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து அடிக்கடி சளி, காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும்.

### மருத்துவ பயன்கள்

உடலை சீராக வைக்க உதவுகிறது. சர்க்கரை அளவினை குறைக்கிறது. ஆன்டி அக்ஸிடென்டாக வேலை செய்கிறது. இரும்புச் சத்து, ரத்த சோகை வராமல் தடுக்கவும், அதிலுள்ள நார்ச்சத்து மலச்சிக்கலை தடுக்கவும் உதவுகிறது. பொதுவாக குதிரைவாலி அரிசி எதிர்ப்பு சக்தி மிகுந்த மருத்துவ குணம் நிறைந்த உணவு என்பது குறிப்பிடத்தக்கது.



**100 கி. குதிரைவாலி அரிசியில் உள்ள ஊட்டச் சத்து அட்டவணை**

| | |
|---|---|
| புரதம் | 6.2 |
| சர்க்கரை | 65.6 |
| கொழுப்பு | 4.8 |
| மினரல் | 3.7 |
| கால்சியம் | 22 |
| பாஸ்பரஸ் | 280 |
| இரும்பு சத்து | 18.6 |
| தையமின் | 9.33 |
| நையஸின் | 4.2 |



***இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்***
***செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.***

*திருக்குறள் 91: இனியவை கூறல்*

*அறம் அறிந்தவர் வாயிலிருந்து பிறந்து, அன்பு கலந்து உள்நோக்கம் இல்லாது வருவதே இனிய சொல்.*

*-சாலமன் பாப்பையா*

# கேள்வி வடிவில் தகவல் கோரலாமா?

கேள்வியாக ஆலோசனையாக புகாராக கோரிக்கையாக யூகமான கேள்வியாக தகவல் சட்ட விண்ணப்பம் தயார் செய்யலாமா?

கேள்விகளாக தாராளமாக கேட்கலாம். தடையேதுமில்லை. கேள்விகளின்றி தகவல்களை கேட்பது என்பது கடினமான ஒன்றாகும். சட்டத்தில் கேள்விகள் கேட்கக்கூடாது என்று எங்குமே சொல்லப்படவில்லை. கேள்விகள் காரணத்தை வினவுவதாக இருக்கக் கூடாது.

ஆலோசனையாக: அலுவலகத்தில் உள்ள உண்மைகளின் அடிப்படையில் பொதுதகவல் அலுவலர் ஆலோசனை வழங்க கடமைப்பட்டவர்.




**உதாரணமாக:**

மக்கள் நல்வாழ்வுத் துறையிடம் நாய் கடித்தால் அதற்கு தடுப்பூசி போட எங்கெல்லாம் வசதி உள்ளது?

இங்கு நல்வாழ்வுத் துறையானது, அந்த வசதி உள்ள இடங்களை குறித்து மனுதாரருக்கு ஆலோசனை வழங்கலாம். மேற்படி இடங்கள் அவரது அலுவலகத்தில் Material Fact-ஆக உள்ளது.

**புகாராக:**

பிச்சினைகளை புகாராக ஆரம்பித்து அதற்கு தீர்வு கோரலாம். அந்தத் தீர்வானது அந்த அலுவலகத்தில்



Material Fact ஆக இருக்கும் பட்சத்தில், எங்கள் ஊரில் அதிக அளவில் நாய்கள் தெருவில் உள்ளன. அவற்றை அகற்ற நான் யாரிடம் மனு செய்ய வேண்டும் போன்ற தகவல்கள்.

கோரிக்கையாக:

தகவல்கள் கோருவதே ஒரு கோரிக்கைதான்.

யூகமான கேள்வி:

தாராளமாக கேட்கலாம். உங்களின் கேள்விக்கான தகவல் அந்த அலுவலகத்தில் இருக்கும் பட்சத்தில் அதை தர பொது தகவல் அலுவலர் கடமைபட்டவர்.

உதாரணமாக:


நீலகிரி மாவட்டத்தில் உதவி ஆட்சியர்தான் மாவட்ட நிர்வாகத்தை தற்போது கவனித்துக் கொள்கிறாரா? என்ற கேள்வி யூகமான கேள்விதான்.

ஆனால், நீங்கள் வினவும்போது, அவர்தான் மாவட்ட ஆட்சியராக பொறுப்பு வகித்தா் அது அங்கு Material Fact ஆக இருப்பதால் பொது தகவல் அலுவலா் பதில் கூற கடமைப்பட்டவர். அதே சமயத்தில் தற்போதைய மாவட்ட ஆட்சியர், நிதித்துறை செயலாளராக செயல்படுவாரா என்ற கேள்வி Hypothetical question. அதற்கு பதில் சொல்ல அவசியமில்லை. ஆனால், உங்களுக்கு பதில் எழுத பொதுதகவல் அலுவலா் முனையும்போது, அந்த மாவட்ட ஆட்சியருக்கு நிதித்துறை செயலாளராக இடம் மாற்றம் வந்துவிட்டால், Hypothetica Fact தற்போது Material Fact ஆக மாறிவிடுவதால், அவா் பதில் சொல்ல கடமைப்பட்டவர்.

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**



# தடையாணை புத்தகம்





மாவட்ட அலுவலக நடைமுறை நூல் பத்தி 161-ல் தடையாணை புத்தகத்தின் பதிவு செய்ய வேண்டிய நிலங்கள் மற்றும் முறைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. எந்த விதமான நிலங்களை ஒப்படை, நிலமற்ற உரிமை மாற்றம் குத்தகை போன்றவைக்கு கொடுக்கக் கூடாது என உறுதி செய்து தடை ஆணை புத்தகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

1. கிராமத்தில உள்ள நீர் நிலைப் புறம்போக்குகள், மயானம், மந்தைவெளி புறம்போக்குகள் அவற்றின் பொது நன்மை கருதியும், பிற்கால தேவை கருதியும் தடை ஆணை புத்தகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

2. குறிப்பிட்ட புறம்போக்கில் ஒரு வகுப்பினர் ஆக்ரமணம் செய்ய எத்தனித்திருக்கும் போது, சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என கருதினால் அந்நிலத்தை தடை ஆணை புத்தகத்தில் பதிவு செய்திடம் வேண்டும்.

3. நகர்ப்புற எல்லையிலிருந்து 8 கி.மீ சுற்றளவுக்குள் உள்ள அனைத்து புறம்போக்கு நிலங்களையும் அரசின் பிற்கால தேவையைக் கருதி தடை ஆணை புத்தகத்தில் பதிந்திட வேண்டும்.

தடை ஆணை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட புறம்போக்கு நிலங்களை பாதுகாப்பது கிராம நிர்வாக அலுவலரின் கடமையாகும். சரக வருவாய் ஆய்வாளர்கள் கிராமங்களில் முகாமிடும் போது இத்தகைய நிலங்களை பார்வையிட்டு ஆக்ரமணம் ஏதும் இருப்பின் உடனடியாக காலி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.



கிராம/ வட்ட அளவில் உள்ள தடையாணைப் பதிவேடு கோட்ட மற்றும் மாவட்ட அளவில் பராமரிக்கப்படும். பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரி பார்த்து ஒவ்வொரு வருடம் ஜுலை 20-ம் தேதிக்குள் சான்று பெற வேண்டும்.

நகல் மனுக்கள்:

பொதுமக்கள் தங்களுக்கு தேவைப்படும் வருவாய்க் கணக்குகளின் நகல்கள் மற்றும் இதர ஆணைகளின் நகல்களை சம்பந்தப்பட்ட அரசு அலுவலகங்களிலிருந்து உரிய விண்ணப்பம் அளித்து பெற்றுக் கொள்ளலாம். மேற்படி ஆவண நகல்கள் நேரிடையாக அவர்களுக்குத் தொடர்புடையதாகவோ அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுபவையாகவோ இருத்தல் வேண்டும். இரகசியத் தன்மை உடைய ஆவணங்கள் தவிர்த்து இதர ஆவணங்களின் நகல்கள் பெற தேடு கூலியாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் முதல் வருடமாக இருப்பின் ரூ.10-ம் அதற்கு முந்தைய ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ.5-ம் செலுத்திட வேண்டும். ஆணவங்களின் நகல்கள் வட்ட அலுவலகங்களில் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியராலும், வருவாய் கோட்டாட்சியர் அலுவல கங்களிலும் வருவாய் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளராலும் சான்றொப் பமிடப்படும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரால் சான்றொப்பமிடப்படுதல் வேண்டும்.

**S.அண்ணாதுரை M.A., B.L.,**
**Cell: 98422 57806**

HKI
HAPPY KARUNAI ILLAM

# மகிழ்ச்சி கருணை இல்லம்

Regd No: 24/2018/BK4

ஆதரவற்றோர் முதியோர்கள் காப்பகம்



நீங்கள் வழங்கும் நன்கொடைகளுக்கு 80G வரிவிலக்கு உண்டு.

**மகிழ்ச்சி கருணை இல்லம்**
ஆதரவற்றோர் முதியோர்கள் காப்பகம்
முற்றிலும் ஆதரவற்ற முதியோர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்!
5/209D, வெள்ளை பிள்ளையார் கோவில் மேடு,
வெள்ளிரவளி (Po), குன்னத்தூர் (Via),
ஊத்துக்குளி (Tk), திருப்பூர் - 638 103.

**99767 12008, 96002 76503, 95663 79796, 77081 42008**

உங்களுடைய பிறந்த நாள், திருமண நாள், நினைவு நாள், கம்பெனி ஆண்டு விழா & பண்டிகை நாட்களில் ஒரு வேளை அல்லது ஒரு நாள் உணவு வழங்கி உதவி செய்ய வேண்டுகிறோம்.



| | |
|---|---|
| காலை உணவு | : 2,500/- |
| மதிய உணவு | : 4,000/- |
| இரவு உணவு | : 2,500/- |
| மொத்தம் ஒரு நாள் உணவு ரூ. | 9,000/- |

| | |
|---|---|
| Bank Name | : IDBI Bank |
| A/c. Name | : HAPPY HOME CHARITABLE TRUST |
| A/c. No. | : 1622102000022923 |
| IFSC Code | : IBKL0001622 |
| Branch | : Palladam Road, Tirupur |









நற்செயல் அனைத்தும் நம் வெற்றிகளுக்கு அடித்தளமாகும்.




happykarunaiillam@gmail.com
www.happykarunaiillam.com
மகிழ்ச்சி கருணை இல்லம்
happykarunaiillam
@magilchi
https://youtube.com/channel/UC1TP-6dpJcU44Uem8gqDWBA

**உணவளித்தோர் உயிர் கொடுத்தோருக்கு சமம்!**

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of Publication,
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore


# POWER GROUP

Power Group

REAL ESTATE | CONSTRUCTION | MARKETING

No.15, TVS Tollgate, (Near Jamal Mohammed College), Banana Leaf Restaurant, Trichy.
(E) powergrouptrichy@gmail.com / www.powergroupsite.com

திருச்சி – கீரனூர் சாலையில்

ஒற்றை முதலீடு ₹1,00,000 மட்டுமே!

ரூ.3,00,000 மதிப்புள்ள
1200 சதுர அடி மனையை வெறும் 8 மாதங்களில்
பெறும் ஓர் அரிய வாய்ப்பு

திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை சிறுகனூரில்...

1000 வீடுகள் கொண்ட நகரம்

சிறுகனூர் 1000 VILLAS

திருச்சியிலேயே முதன் முறையாக 100 வீடுகள் கொண்ட ஒரு பிரமாண்ட பசுமை நகரம்

MTS நகர்

ஆர்ச்சம்பட்டி
திருச்சி–தோகைமலை ரோடு

₹3,00,000 மட்டுமே

EMI SCHEME AVAILABLE

தொடர்புக்கு : 7867828203, 6383434499

குறிப்பு : மனை வாங்குபவர்களே பத்திரப்பதிவு செய்துகொள்ளவேண்டும்.


4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO